[illegible]

[illegible]

[illegible] 1934

[illegible]

R693ஞ211, N28
N34.7.4.
187094

**Registered No. M. 2330.**

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 JUN 1934
MADRAS

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு"

| மலர் ௭ | பவ ஆண்டு சித்திரைத் திங்கள் 1934 ௵ ஏப்ரில் ௴ | இதழ் ௪ |
|---|---|---|

## பெரிய புராணமும் கற்பும்

[ஞாயிற்றுருவினன்]

'கற்பு' என்பதற்குச் 'சொற்றிறம்பாமை' எனப் பொருள்கண்டார் ஒரு முன்னோர். இவர் அறிவால் எவர்க்கும்முன்னவரே. சொல் + திறம்பாமை = சொற்றிறம்பாமை. சொல் = பெரியோர் கூறிய சொல்லின்பொருட்படி, திறம்பாமை = தவறாது (விலகாது, மாறுபடாது) நடத்தல். பெரியோராவார் அறிவு அருள் இவைகளால் நிரம்பி உயந்தவர். செய்யுள்களாலும், ஒழுக்க அமைவினாலும் அவர்கள் உலகத்தவர்க்குச் சொல்லிவைத்தமைதாம் அவர்களது சொற்களாகின்றன. அவற்றிற்கு முரணாக (மாறாக) நடப்பதே திறம்புதலாகும். அவர்கள் நன்னெறிச் சென்ற பெரியாராதலின், அவர் போனவழிப் போகாமை தீய நெறியிற் போனமையோடு ஒக்கும். அவ்வழிப் போதல் 'கற்பு' ஆகும்.

'பெரிய புராணம்' பல பெரியவர் நடந்து காட்டிய - வாழ்ந்து விளக்கிய - உயர் நெறியைக் காட்டுகிற விழுமிய தமிழ் நூலாம். ஆதலின், பெரிய புராணத்தில் 'கற்பு' என்பதைப்பற்றி அங்குச் சுட்டிய பெரியவர் வாழ்க்கைகளாலும் அவைகளைப் பாடிய சேக்கிழார் வாக்காலும் அறியலாம் என்பதே எடுத்துக்கொண்ட ஆராய்ச்சி யாகும்.

"கற்றதனால் ஆய பயன் என்கொல்? வாலறிவன் நல்தாள் தொழாஅர் எனின்" என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்கியமாய் நடந்துகொண்டவர் ஒவ்வொரு நாயனாரும் என்பதை அறிவுடைப் பெரியார் நெறியுடன் உணர்வர். 'வீடுபேறு' கருதிய நாயன்மார் வாழ்க்கைப்படி வாழ்தலாவது, எம்மனோர் பலர்க்கும் இயலாததும், அதனால், இயைபாகாததும் ஆவன.

பெரியவர் வாழ்க்கையையும் அவர் வாழ்ந்தமுறைகளையும் கற்று அவ்வாறு நடக்க அறிஞர் விரும்புவர். ஏனெனில், அவர் வாழ்வு இன்பமே பயக்கும் இயல்பினை யுடையது. கற்றபடி நடத்தலும், பண்டைநாள்தொட்டு இன்பம் தேடுதல் ஒன்றனையே குறிப்பதாயிற்று. அவ் இன்பமோ பேரின்பம் சிற்றின்பம் என இருபிரிவுகளைக் கொள்வது. ஆதலின் பேரின்பத்தைப்பற்றி முன் ஆராய்ந்து பார்க்கலாம்.

கோவணக் கள்வராகி அமர்நீதி நாயனாரிடம் வந்த கடவுளானவர் தாம் கோவணம் இட்ட தட்டுக்கு, நாயனாரது உயிரில் உயிருள் பொருள்களை எல்லாமும் இட்ட தட்டு ஒப்பாகாமை கண்டு "இழைத்த அன்பினில் இறை திருநீற்று மெய் அடிமை, பிழைத்திலோம் எனில் இருதட்டும் சமனுற" என்று, நாயனார் கற்ற பயன் கூறித் தட்டில் ஏறினார். தழைத்த பேரன்பில் நாயனாருடன் அம்மை ஏறிச் செழித்த பேருட் சிவனுறைலோகமே சென்றார். இதனால் இருபால் மக்களும் பேரின்பம் பெறுதற்குரியரென்று நேர்வதால் இருபால் மக்கட்கும் 'கற்பு' நெறி இன்றியமையாதது எனக் கண்டேம். அடுத்தது சிற்றின்பப் பகுதியிற் 'கற்பு' எவ்வாறு விளங்குகின்றதென ஆய்வாம்.



பெரியபுராணம் களவு வழி இன்பத்தை அறவே கூறியதின்று. ஆதலின், பெரிய புராணத்திற் கண்ட நாயன்மார் தமிழ் முதலியற் (இலக்கண) காலத்துக்குப் பிந்திய காலத்தினர் என்பது ஒருதலை.

பெரிய புராணத்தில் திலகவதியார், மாதினியார், புனிதவதியார், இயற்பகையார் தனித்துணைவியார், இளையான்குடி மாறர் அறத்துணைவியார், மங்கையர்க்கரசியார் இன்னோர் காட்டிய கற்புடை வாழ்க்கைகளே கருதற்பாலன.

ஆண் மகனை ஒரெல்லைக்குள்ளாக்காது பெண்மணியின் கற்பைப் பேசும் பெரியபுராணம் அம்மைமாரைப் போற்றுவதுபோல் அருளைப் போற்றியதுபோலும்.

(க) திலகவதியம்மையாரைப் புகழனார் முடியுடை வளவன் படைத்தலைவராயும் சிவநேசத் திறம் படைத்தவராயும் இருந்த கலிப்பகையாருக்கு மணம் நேர்ந்தார். மண நிகழ்வின்முன் 'வடபுலத்து மன்னர் பகைகொண்டார்' என அறிந்த சோழன், கலிப்பகையாரை அம்மன்னரை அடக்கவென்று ஏவினான். அங்கு நிகழ்ந்த போர்முனையில் கலிப்பகையார் பூத உடல் நீத்தார். இதைக் கேட்ட திலகவதியம்மையார் "எந்தையும் என் அனையும் அவர்க்கு எனைக் கொடுக்க இசைந்தார்கள். அந்தமுறையால் நான் அவருக்கு உரியள். ஆதலினால் இந்த உயிர் அவரோடு இசைவிப்பேன்" எனத் துணிந்தார். சொற்றிறம்பாமைக்கு இதனினும் சிறந்த முறை காண்டல் அரிதே யாகும். மகள் மனமறியாது பெற்றோர் செய்தது பிழை எனப்படினும், பெற்றார் மகள் மனம் அறிந்த பெருமையர் என்பது, பின்னே திலகவதியார் மனப் பாங்கால் விளங்குகிறது.

(உ) மாதினியார் என்னும் தாயார் நடந்துகொண்ட முறையும் கவனித்தற் குரியதே. புகழனார் பொய்யுடலைவிட்ட பொழுதே "பெற்றிமையால் உடன் என்றும் பிரியாத உலகு எய்தும் கற்புநெறி வழுவாமற் கணவனாருடன் (இறந்தார்) சென்றார்". கணவருடன் இறந்தால் முத்தி பெறலாம் என்பது அக்காலக் கருத்து.

(௩) காரைக்காலம்மையார் மாங்கனி வருவித்த புதுமை கண்ட கணவனார் பரமதத்தர், அம்மையார்பால் அன்பும் அச்சமும் கொண்டவராய்ப் பாண்டிநாடடைந்து ஒரு குலக் கொடியை மணந்து, சில மகட்பேறெய்தி அங்கு இருந்தனரேயன்றி, காரைக்காலுக்கேனும், தமது தந்தையார் பெருவளம் படைத்து வாழ்ந்த நாகபட்டினத்துக்கேனும் திரும்பினாரல்லர். அம்மையாரின் சுற்றத்தார் இதை யறிந்து பரமதத்தர் இளைய துணைவியாருடன் வதிந்த தென்பாண்டி ஏறலுக்கு அம்மையாரைப் "பூந்தவி சேற்றிப் போய்" பரமதத்தருக்குத் தெரிவித்தனர். அம்மையாரிருந்த இடத்துக்குத் தமது இளைய துணைவியாருடனும் மகளுடனும் வந்த தத்தர் அம்மையாரை வணங்கி மாம்பழப் புதுமையையும், பின் நிகழ்ந்த அனைத்தையும் சுற்றத்தார்க்குக் கூறி, 'வழிபடும் தெய்வமன்றி மனைவியா ரிவராகார்' எனக் கருதி வாழ்ந்தமையும் கூறினார். உடன் அம்மையார், யாவரும் காண நேர்நின்று இறைவனைக் (கடவுளைக்) கூவி,

"ஈங்கிவன் குறித்த கொள்கைஇது இனிஇவ னுக்காகத்
தாங்கிய வனப்புநின்ற தசைப்பொதி கழித்திங்கு உன்பால்
ஆங்கு நின்றார்கள் போற்றும் பேய்வடிவு அடியேனுக்குப்
பாங்குற வேண்டுமென்று பரமனைப் பணிந்தார்"

என்று சேக்கிழார் பாடினார். காதலிருவரிற் கணவர்க்குரியது காதலி உடம்பே என்பதையும், அறிவும் உயிரும் கணவர்க்குக் கட்டுப்படுவன அல்ல என்பதையும் விளக்குகிறார்.

(௪) கைதவ மறையோனுக்கு அருந்ததிக் கற்பின் தம் அறத்துணைவியாரை ஈவதாக வாக்களித்த இயற்பகையார் மனைவிபாற் சென்று "விதிமணக்குல மடந்தை இன்று உன்னை இம்மெய்த்தவர்க்கு நான் கொடுத்தனன்" என்றார்; மதுமலர்க்குழல் மனைவியார் மனங் கலங்கினார், பின் தெளிந்தார். பின் கணவரைப் பார்த்து "என் உயிர்க்கு ஒரு நாத, இன்று நீர் எனக்கு அருள் செய்தது இதுவேல், நீர் உரைத்தது ஒன்றை நான்செய்யும் அத்தனையல்லால் உரிமை வேறுளதோ?" என்று தன்தனிப் பெருங் கணவரை



வணங்கினார். இவ் அம்மையார் (மனைவியார்) பிறர்க்கு உரியார் என மதித்த நாயனார், எதிர் வணங்கினார். இதனோடு இருவர்க்கும் உடல் உறவு போயிற்று. பின் அம்மையார் கைதவ மறையோனைப் பணிந்து, 'இனி மாதவன் உடலைத் தொடாதிருப்பின், புறப்பணி மாத்திரம் செய்து உய்யும்படி இவ் உடலைக் கொள்ளலாம். இன்றேல் அறத்தள்ளலாம். எதற்கிடமாவதோ?' என்று சிந்தனை செய்து திகைத்தார். மாதவனும் அம்மையாரும் புறம்போவது கண்ட சுற்றத்தார், பல படை ஏந்திக் குறுக்கிட, நாயனார் அவர்களை தம் கைவாட்கு விருந்திட்டு, மாதவனும் அம்மையாரும் வழிக்கொள்ளும் வண்ணம், துணைபுரிந்தார்; திரும்பினார்; திசையும் நோக்கிலர்; திரும்பிப் பார்த்திலர். கைதவன் வலிமையை அம்மையார் கற்பு வெல்ல, கைதவனாய் வந்த கடவுள் அஞ்சி,

"இயற்பகை முனிவா (1) ஓலம் ஈண்டுநீ வருவாய் (2) ஓலம்
அயர்ப்பி லாதானே (3) ஓலம் அன்பனே (4) ஓலம் (5) ஓலம்
செயற்கரும் செய்கை செய்த தீரனே (6) ஓலம்"

என்று அறுமுறை ஓலமிட்டு அலறினார். இவ்வாறு கற்புப் பெருமை கொண்ட அம்மையாரை, உயிரில் பொருள்போல் நாயனார் வழங்கிய முறையை எவ்வாறு அறிஞர் கூறுவரோ? ஆண்மகன் பெண்மணி பால் வைத்த அன்பு எத்துணை சிறந்தது , கற்பால் கடவுளரை வென்ற இவ் அம்மையாரின் பெருமை எப்பாலவரும் எந்நாளிலும் வியந்து போற்றும் தகைமைத்தே!

(௫) இயற்பகை நாயனாரின் வாழ்க்கைக்கும் குணத்துக்கும் நீலகண்ட நாயனாரின் வாழ்க்கையும் குணமும் மாறாக அமைந்தன. அளவை நூல் உண்மை கூறும் போதெல்லாமும் அடிக்கடி பேசும் தொழிலினர் மனைவியார் தம் கணவனாரை "தீண்டு வீராயின் எம்மைத் திருநீலகண்டம்" என்று தடுத்தார். இவர் தடுத்த முறை என்னேயோ? கால முறையேயோ? மற்றோர் தோள் தம் கணவனார் தோய்ந்தாராகக் கொண்ட துயர்மனக் கொடுமையேயோ? ஆயினும் யாக்ஞயவல்கியர் கதையாயிற்றிலது. அம்மையார் "எம்மை" என்று

ராதலின், நாயனார் 'மற்றை மாதரார் தமையும் என்றன் மனத்திலும் தீண்டேன்' என்றார். நாயனாரும், அம்மையாரும் மனந்திருத்தியாண்ட வல்லாளர் என்பதைப் பெரிய புராணம்,

> "கற்புறு மனைவியாரும் கணவனார்க் கான எல்லாம்
> பொற்புறு மெய்யுறமல் பொருந்துவ போற்றிச் செய்ய
> இற்புறம் ஒழியா தங்கண் இருவரும் வேறுவைகி
> அற்புறு புணர்ச்சி யின்மை அயலறியாமை வாழ்ந்தார்"

எனப்பாடுகிறது. நீலகண்ட நாயனாரும் அவர் அறத்துணைவியாரும் இளமை நலனை நீத்தார். பிறர்பால் எவரேனும் மறந்தும் இம்மாற்றம் மொழிந்திலர் என்றும், இதனால் கற்பு இருபால் மக்களுக்கும் வேண்டிய தொன்று என்றும் பெரிய புராணம் நிறுவுகிறது. "இவனுக்காகத் தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி" என்று காரைக்கால் அம்மையார் கூறிய முறைமையும் இங்குக் கருதத் தக்கது.

(சு) இளையான் குடிமாறர் வாழ்க்கையில் கற்புடை மனைவியர் தம் நாயகரைப் பேணும் முறைமையைப் பெரிய புராணம் கூறுகிறது. அன்று தம் வயலில் விதைத்த வித்து வாரி மீண்ட பொழுது "மனைவியாரும் வாய்தலின் நின்று வாங்கி" என்று கூறி, 'நள்ளிரவில் மழைப்பெயலில் வயல் நோக்கிச் சென்ற மாறர் எவ்விதம் திரும்புவரோ?' என்று மனம்பதைத்துக் கொண்டு நின்ற அம்மையார் நின்ற தன்மையைப் பெரிய புராணம் குறிப்பிடுகிறது.

நடு நிசியில் பெருமழையில் நற்றவத்தவர் வேடமே கொண்டு ஞாலமுய்ந்திடக் கடவுள் வந்தபொழுது, தம்பால் தாரிப்பின்றிப் பசித்தலைக் கொள்வதைக் கூறினார். நாயனார் வந்தவரின் ஈரமேனியைத் துடைத்தார்; இன்னமுதூட்டுதற்கு எண்ணினார்; தாரமாதரை நோக்கினார்; தபோதனர் தீரப் பசித்ததாகச் செப்பினார்; "நமக்கு முன் இங்கு உணவு இல்லை. ஆயினும், இமக்குலக்கொடி பாகர்க்கு, இனியவர் தமக்கு, நாம் இன்னடிசில் தகவுற அமைக்குமாறு எங்ஙனம்? அணங்கே" என்றார். அம்மையார், "தீது செய்வினையேற்கு என்செயல்" என்று வருந்தினார். "நட்புடை இருவர்



வாழ்ந்த கற்புடை இல்வாழ்க்கையில் நாயகன் எண்ணம் போல் நாயகி செய்வதற்கு (வழி) இல்லையே" என்ற மனநோய், அம்மையார் தம்மை "தீது செய்வினையேன்" என நோவச் செய்தது.

(எ) திருவெண்காட்டு நங்கையார் கற்பு, மகிழ்நன்முகம் வாடப் பொறுக்காத கற்பு.

> "உண்ண வேண்டும் அடியாரை உரித்தாய்த்தேடிக் காணாது
> வண்ண மேனி மலர்முகம்கண் வாடிநொந்து மீண்டவரைப்
> பண்ணின் மொழியார் வெண்காட்டுப் பாவைபார்த்துச் சகியாராய்
> அண்ணலே பைரவராய் அறப்பசித்திங்கு ஒருவர் வந்தார்"

> "நண்ணித் தொழுது இங்குஇரும் என்றேன்
> நங்கை இருக்கும்இடம் தரியோம்
> வண்ண ஆத்தி மலர்க்கிளைக்கீழ் வைகின்றோம்
> என்று அங்குற்றார்
> எண்ணற்கு அரியார் உத்தராபதிதாம்
> இருப்பதென மொழிந்தார்"

என்று நாயகர் வருந்தப் பொறுக்கா மனத்துடன் மொழிந்தார். ஆத்தியடிச் சென்று மீண்டு நடந்தன கூறிய நாயனார், வேறுவழி காணாராய் அம்மையாரிடம் "எனை இங்கு உய்ய நீ பயந்தான் தன்னை அழைப்போம்" என்ற உடன், நாயகர் முகம்மலரக் காண்பது என்றோ? என ஏங்கிய மனத்தராய் நின்ற அம்மையார் "நம்மைக் காக்கவருமணியை அழைமின்" என்றார். மேலும் குழந்தையை அரிந்தகாலத்தும், தம் நாயகரது அருமை உயிரைத் தமக்குத் தம்மகன் அளித்தான், என முகமலர்ந்தார். இப்பண்பைப் பெரிய புராணம் "எம் கணவனார் அருமை உயிரை எனக்களித்தான் என்று முகமலர" என்றுபாடி அம்மையாரை வணங்குகிறது. என்னே நாயகரைப் போற்றிய அம்மையாரது அரிய செயல்! என்னே!! என்னே !!!

(அ) இனி எங்கள் அம்மையாருள் அருமை அம்மையாராகிய மங்கையர்க்கு அரசியார் கற்பு. இவரை மானியார் என்று வணங்கியது திருத்தொண்டத் தொகை. மானம்= பெருமை. மானியார்=பெருமை நிறைந்தவர். கற்போ?

பிறபெரு நலங்களில் ஒவ்வொன்றுமோ? எதுவும் இவரிடம்
என்றும் இயைந்திருந்தது. இந்த அம்மையார் பிறந்த குடிக்
கும் புகுந்த குடிக்கும் பொன்றாப் புகழே என்றும் நிலவச்
செய்தவர். சம்பந்தர் வரவு கண்டழுங்கிய அமணருடன் தம்
தலைவரும் வருந்தி மலரணையில் உணவின்றி வாளாதுயின்ற
பொழுது "நீடிய தெய்வத் தன்மை, அன்னவர் வாது செய்
தால், வென்றவர் பக்கம் சார்ந்து, துன்னுவது உறுதி
யாகும் சுழிவுநேல் மன்ன" என்று நன்னயம் பேசிய நற்
பேரமைச்சர் நம் அம்மையார். பாண்டியர் சுரநோயால்
வருந்திய பொழுது பயந்து சம்பந்தரைக் கண்டு "மண்டிய
கண் அருவி நீர் பாய மலர்க் கைகுவித்துப், புண்டரிகச்
சேவடிக் கீழ்ப் பொருந்த நிலமுறவீழ்ந்து," 'உரை குழறி'
மெய்ந்நடுங்கி ஒன்றும் அறிந்திலராகித் தரைமிசைப் புரண்டு
"தீராமைத் தீப்பிணியால், மையலுறும் மன்னவன் முன்
மற்றவரை வென்றருளில், உய்யும் எமதுயிரும் அவன் உயி
ரும்" என உரைத்து உயர் வாழ்வைத் தம் நாயகர்க்குத் தேடி
வைத்த உயிர்த்துணைவியார் யாம்பெற்ற அம்மையார். எம்
அம்மையார் தாமும் தம் நாயகரும் ஈர் உடலும் ஓர் உயிரு
மாய் வாழ்ந்த நலத்தை "உய்யும் எமதுயிரும் அவன் உயி
ரும்" என்ற பொன்மொழிகளாற் பெரியபுராணம் போற்று
கிறது. சைவ மாதவஞ் செய்த இந்தத் தனித்தலைமை யரசி
யாரைச் சேக்கிழார்,

"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர் திருக்குலக் கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத்திரு மடந்தை கன்னி நாடான்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை"

என்று பாடி மங்கையர்க்குச் சிறந்தனவாக உள்ள விழுப்
பெருங் குணங்களுக் கெல்லாமும் இவ்வம்மையாரே, உறை
விடம் என்பதாகத் "தனியரசி" என்று விளக்குகிறார்.

இவ் அம்மையாரிடம் பிறரிடம் காணாத - காணவொண்
ணாத பெருந்தகைக் குணங்களெல்லாமும் நிறைந்து நீங்கா
நேர்மையால், சைவத்திரு நெறிய தமிழ் ஞான சம்பந்தர்



இவரை "மங்கையர்க்கு அரசி, வளவர் கோன்பாவை, வரி
வளைக்கை மடமானி, பங்கயச் செல்வி, செந்துவர் வாயாள்,
சேலன கண்ணாள், திருநுதற் செல்வி" என்று உருவ நலத்
தையும் "செய்ய தாமரைமேல் அன்னமே யனைய சேயிழை"
என உருவப் பொலிவையும் சிவன் திருநீற்றினை வளர்க்கும்
பந்தணை விரலாள் என மனமாண்பையும் சைவஞ்சார் தவத்
தினையும் முத்தின் தாழ்வடமும், சந்தனக் குழம்பும், நீறும்
தன்மார்பினிற் றுலங்கப் பத்தியார்கின்ற என அணிசெய்
நலத்தையும் மண்எலாம் நிகழ மன்னனாய் மன்னும் மணி
முடிச் சோழன் றன் மகள் என உயர்குடிப் பிறப்பையும் கூறிப்
பின்னும் பல கூறலாற்றாது, 'பல்நலம் புணரும் பாண்டிமா
தேவி' என வனைய சிறப்புகள் எல்லாமும் அடங்க, நலங்கள்
சார் தகைமையையும், கற்புடை பெருமையையும் நிறைந்த
செஞ்சொற்களால் பரந்து வியந்து பணிகின்றார்.

ஆகவே, பெரிய புராணத்தில், அமர்நீதி நாயனாரும்
அவர் மனைவியாரும் "பற்றுக பற்றற்றார் பற்றினை" என்பதை
விளக்கித் தாம் கற்ற திறனைக் காட்டினார். திலகவதியார்
வாழ்க்கையானது, "தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை"
என்ற கற்பு முறையைக் கவினுற விளக்குகிறது. மாதினி
யார் வாழ்க்கை காதலரோடு காதலியும் உடல் நீத்தல் முத்
திக்கேது எனப் போற்றுகிறது. புனிதவதி என்னும் காரைக்
கால் அம்மையார், ஆன்மாக்கள் ஒவ்வொன்றும் தனித்தனி
நற்பேறெய்தும் தகுதியுடையன என்றும், கற்புடைப் பெண்
டிர் உடல்நலம், கணவர் பயன் அடைய என்றும் விளக்கு
கிறார். இயற்பகையார் வாழ்வில், அம்மையாரது கலக்கமும்
திகைப்பும் ஆண் மகனது பிறர்நலம் பேணாத தன்மையும்
விளங்குவன. மேலும் பெண்ணின் கற்புக்குக் கடவுளும் அஞ்
சுவர் என்பதும் விளங்குகிறது. சிறுத்தொண்டர் இளையான்
குடிமாறர் வாழ்வுகளில் நாயகர், நாயகிமார், இவர்க்குள்ள
ஒத்த உரிமையும் அறிவும், இருபாலாரும் இல்லறம்பேணிய
ஒருவரை ஒருவர் நடத்திய முறையும் துலங்குகின்றன.
ஆண் மகனில், இயற்பகையார், பெண்மணியைக் கருத்தைத்
திருத்தாது உயிரில் பொருளென நடத்திய முறையும்,

பெண்மகளில், நீலகண்டர் மனைவியார், தம் நாயகரிடம் சிறிதும் பொறுமை காட்டாத தன்மையும் விளங்குகிறது.

பெண்களுக்கு வேண்டிய நற்குணங்கள் எல்லாமும் மணிமிக இயைந்த மங்கையர்க்கரசியார் வாழ்வில், இருபாலார்க்கும் ஒத்த அறிவும் ஒத்த உரிமையும் பேரின்பப் பெருக்கும் சமமாக உள்ளன என்பதும், பாண்டியன் சமண்மத மயக்கில் ஆழ்ந்த காலத்து அறிவுடையார் செயத் தருவன இவை யெனக்கூறிய அம்மையாரது அமைச்சு மொழிகளால் பெண்களில் பேரறிவாளர் உளர் என்பதும், இருவேறு வகைப்பட்ட சமய ஒழுக்கில் நின்றும் முரண்படாது பாண்டியரும் நம் அம்மையாரும் இருந்தாராதலின் இருபாலார்க்கும் சம உரிமை உண்டென்பதும், பாண்டியர் காய்ச்சல் வாய்ப்பட்ட காலத்து அம்மையார் மனதிற் கியைந்து பாண்டியர் சம்பந்தரை அழைக்க நேர்ந்தமையாலும் சம்பந்தர் முன் அம்மையார் காட்டிய மனத்துடிப்பு மன நோவுகளாலும் இருவரும் ஓருயிரும் ஈருடலுமாக வாழ்ந்தனர் என்பதும், 'உய்யும் எமது உயிரும்' என்ற விழுத்தகுமெய் மொழியால் இருவரும் உயிர்கலந்த அன்பர் என்பதுவும், பாண்டியன் சைவத்திற்கு மீண்ட காலத்தில் 'பெற்றனம் பெருமையின்று பிறந்தனம் பிறவாமென்மை' என்று அம்மையார் தளர்விலாத மகிழ்ச்சி பூத்த தன்மையால் பாண்டியர் சிவனடிப் பேறெய்தல் அம்மையார் திருவுளப் பாங்கு என்பதும், துலங்குவான் வெளிப்படர் ஞாயிறு என்ன பேரொளி வீசிப் பிறங்குகின்றன.

இவ்வாறு படிப்படியாகக் கற்பின் தன்மையைப் பெரிய புராணம் விளக்கிய முறையானது தேவருந் தொழு தெழும் சிறப்பு வாய்ந்ததே.

# திருஞானசம்பந்தர் பதிக அமைப்பு

## 7. திருஞானசம்பந்தர் பதிக முதற்பாகத்தின் அம்சங்கள்

[E. N. தணிகாசல முதலியார்]

திருஞானசம்பந்தர் பதிகங்களில் முதற் பாசுரம் முத்தியில் விருப்பத்தை விளக்கும். அவ்வாறு விளக்குமா, அல்லது வேறு விஷயத்தை எடுத்துக் காட்டும் வேறுவகை அமைப்பு பெற்றிருக்குமா என்பதைத் திருக்கடைக்காப்பால் எளிதில் அறியலாம். புகலிவேந்தர் பதிகங்களில் ஏதாகிலும் ஒன்றை எடுப்போம். (சீர்காழி - பண் - குறிஞ்சி) "உரவார் கலையின்" என்று ஆரம்பிக்கும் பதிகத்தை எடுத்தாராய்வோம். இதில் திருக்கடைக்காப்பில் "கலிக்காழி அடிகள் தம்மை அந்தமில் ஞானசம்பந்தன், படிகொள் பாடல் வல்லவர் தம்மேற் பழி போமே". அந்தமில்லாதவன் தன்னை யடையவும், தம்மேற் பழி (அது எத்தகைய தேனும்சரி) நீக்கவும், வழிகாட்டும் பதிகம் என்பது இத்தகைய திருக்கடைக் காப்பாலுணரலாகும். ஆதலால் ஏழுவகை யோக பூமிகளில் முறையே செல்லும் இலக்கணம் இப்பதிகத்தின் முதல் ஏழு பாசுரங்களில் ஒரு போக்காய்த் தோத்திரத்தில் குறிப்பிடப்படுமென்று நாம் அநுமானிக்கலாம். இதன் முதல் பாசுரம் முத்தியில் விருப்பமென்னும் சொற்றொடர் பெறாவிடினும், தத்துவ ஞானத்திற்கு ஆரம்பநிலை யதுவாதலால், தத்துவ ஞானத் தலையாரைப்பற்றிய விஷயம் இச்செய்யுளிற் காணப்பட்டிருக்கின்றது :—

உரவார் கலையின் கவிதைப் புலவர்க் கொருநாளுங்
கரவார் வண்கை கற்றவர் சேருங் கலிக்காழி
அரவார் அரையா! அவுணர் புரமூன் றெரிசெய்த
சரவா! என்பர் **தத்துவ ஞானத் தலையாரே.**

**—சீர்காழி - பண் - குறிஞ்சி - 1.**

ஆராய்ச்சி நுண்ணறிவில் முத்தியில் விருப்பம் என்பது யாதெனின், தத்துவ ஞானத் தலையாகிய வஞ்சகமற்ற நிலையன்றோ? புகலிவேந்தர் பஞ்சாக்கரத் திருப்பதிகத்தின் முதற் செய்யுளில், வஞ்சக மற்றடி வாழ்த்தலின் பயனை எடுத்துக் காட்டுகின்றார் :—

“ துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாடொறும்
**வஞ்சக மற்றடி வாழ்த்த** வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே !

**—பொது - பண் - காந்தார பஞ்சமம் - பஞ்சாக்கரத் திருப்பதிகம் 1.**

முதல் யோக பூமியின் மாட்சிமை யாதென ஆராய்ந்து நோக்கில், அதில் பற்பல குணங்கள் காணப்படுமன்றோ? அவற்றில் முக்கியமான குணங்கள் பற்பல வகைகளில் காணப்படுவனவற்றில் ஒன்றைக் குறிக்கும் தொடர் மொழியை முதற் பாசுரத்திற் கலந்து ஆளுடைய பிள்ளையார் பாடுவதை ஒவ்வொரு முதற் செய்யுளிலும் காணலாம். சில செய்வினையில் முத்தி விருப்பம் கூறாது, செயப்பாட்டுவினைத் தன்மையாய் “ உள்ளங் கவர் கள்வன் ” என்றும் வரும். முதற் பூமியில் புகுந்தகாலை, காளவிஷமாகிய மாயை அழிந்து மறைந்துபோவதால் “ விடமுண்ட கண்டன் ” என்னும் சொற்றொடரும் வரலாகும். முத்தியில் விருப்பமுடையவர் ஆரம்பிப்பது பஞ்சாட்சர மந்திரமாதலால், அதைக் காட்டுவதுபோல் திருநீற்றுப் பதிகத்தில் “ மந்திரமாவது நீறு ” என்னும் சொற்றொடருடன் பாடியிருப்பது காணலாம். இவ்வாறு தத்துவஞானம் விளக்குமென்னும் குறிகள் தரும் திருக்கடைக் காப்பு அமைந்த பதிக முதற் செய்யுளில் நாம் முத்தி விருப்பயாகிய முதல் யோக பூமிக் கண்டங்களைப் பலவகையிற் காணலாகும்.

இரண்டாவது யோக பூமியாவது நற்கேள்வி - அதாவது கல்வியின் மிக்கவர் தங்கள் கல்வியோடு திருப்தியாகாமல், மற்றும் பிற கல்விமான்களிடம் மாணவர் நிலையில் நின்று கேட்கும் நற்செய்கையாம். கற்றல், கேட்டலுடைப் பெரி



யார்களைத் திருஞானசம்பந்தர் “ தோடுடைய செவியன் ” பதிக இரண்டாம் பாசுரத்தில் வைத்துப் பாடியிருப்பது காண்க. நற்கேள்வி உயர்ந்தோரிடத்திலேயே கேட்க வேண்டுமென்னும் விதியில்லை. குற்றமற்ற வண்டுகள், கிளிகள் முதலிய சீவர்கள் ஓதுவதும் சில சந்தர்ப்பங்களில் நற்கேள்வியாய் முடியும். உதாரணம் :—

“ கழல்மல்கு பந்தோடம் மானை முற்றில்
**கற்றவர்** சிற்றிடைக் கன்னிமார்கள்
பொழில்மல்கு **கிள்ளையைச் சோற்ப யிற்றும்**
புகலிநி லாவிய புண்ணியனே !

**—திருப்புகலியும் - திருவீழிமிழலையும் - வினாவுரை 2.**

கிளிகளின் சொற்களும் வண்டுகள் பாடும் பண்களும் சிவபெருமான் சீர்பாடலாகும். திருக்கண்ணார் கோயில் பதிக 2-ம் செய்யுளில், “ கொந்தலர் சோலைக் கோகிலமாடக் குளிர் **வண்டு செந்திசை பாடும்** ” என்றது போலும், இங்கு சீகாழிப் பதிகத்திலும், “ மொய்சேர் வண்டுண் மும்மத நால்வாய் முரண்வேழக் கைபோல் வாழைக் காய்குலையீனும் ” என்றார். காசு நல்கும்படிப் பாடிய திருவிருக்குக்குறளிலும் “ **மறைகோள்** மிழலையீர்....முறைமை நல்குமே ” என நற்கேள்வியைச் சிலேடைபோல் குறிப்பிடுகின்றார். நற்கேள்வியில் ஆழ்வோரைத் துன்பம் வாராது சிவபெருமான் பாதுகாப்பாரென்பது விளங்கச் சில 2-ம் செய்யுட்கள் “நெற்றித் திருக்கண் நிகழ்வித்தீ” ரென்னும் பிரபாவம் விளக்கும். இன்னும் நற்கேள்விக்குச் சம்பந்தமான குருமூர்த்தம் நந்தியெம்பெருமான் முதலியனவும் 2-ம் செய்யுட்களில் காணப்படுகின்றன. அல்லது நற்கேள்வியால் சிவபெருமானைப் பணிந்து வினை தீர்ந்த இந்திரன் முதலானோர் சரித்திரங்களும் குறிப்பதுண்டு :—

“ கந்தமா வுந்துபுகை யுந்தலில் **விளக்**கேர்
இந்திர **னுணர்ந்துபணி யெந்தை யிடம்**...”

**—திருவையாறு - திருவிராகம் - பண் இந்தளம் 2.**

மூன்றாவது யோக பூமி சத்தில் மனநாட்டம். முத்தியை

விரும்புவோன் நற்கேள்வியால் சத்து இது வென்றும், அசத்து இது வென்றும் உணர்வன். இது, நித்தியா நித்திய வஸ்து விவேக மென்றும் கூறப்படும். இந்நிலை, புத்தி (Intellect) யென்னும் அந்தக் கரணத்தோடு நில்லாமல், சத்தான மெய்ப்பொருளில் மனதைச் செலுத்துவதுடன், அதுவே நிலையாய் நிற்கச் செய்தலாகும். இந்நிலை துறவில் முதிர்ந்த பக்குவமாகும் :—

" துக்கம் மிக்க வாழ்க்கையின் சேர்வினைத் துறந்து நீர்
தக்கதோர் நெறியினைச் சார்தல் செய்யப் போதுமின் !"
—திருக்கோடிகா - பண் - நட்டராகம் - 3.

தக்கதோர் நெறியாகிய சத்தின் மனநாட்டம் ஒருவனுக்குக் கைவல்லிய மாயிற்று என்பதற்குப் பரீட்சையாதெனில், அன்னோனுக்கு இம்மையில் துன்புறுத்தக் கூடிய நோய் ஒன்றும் அணுகாது. நோயால் பீடிக்கப்படுபவன், அந்நிலைக்குச் சென்றவனல்லன் என்பது திண்ணம். சத்தில் மனம் நாட்டியவுடன் தலையில் மூளையான நேர்மை பொருந்த ஏனைய நரம்புத் தத்துவங்கள் தத்தம் கடமையைச் சரியாய் இயற்றுவதால் தேகத்தில் நோய் நிற்பதற்கு இடமில்லை. இதைப் புகலி வேந்தர்,

" அளகத் திருநன் னுதலிபங்கா ! அரனேயென்
றுளகப் பாடும் அடியார்க் குறுநோய் சாராவே "
—சீர்காழி - பண் - குறிஞ்சி - 3.

என்றார். இவ்வாறு அண்ணலாரடியாராகிய, சத்தில் மனநாட்டம் வைப்பவர் பக்தர்களில் சிலரேயென்பதும், ஏனையோர் சிவனடி பரவுதலென்பது உபசார வழக்கென்பதும் சம்பந்தருணர்ந்தனவே :—

" அலரும் மெறிசெஞ் சடைதன் மேல்
மலரும் பிறையொன் றுடையானூர்
சிலரென் றுமிருந் தடிபேணப்
பலரும் பரவும் பனையூரே "
—திருப்பனையூர் - பண் - தக்கராகம் - 3.



" அழவல் லவரா டியும் பாடி
எழவல் லவரெந்தை யடிமேல்
விழவல் லவர்வீ ழிம்மிழலை
தொழவல் லவர்நல் லவர் தொண்டே !"
—திருவீழிமிழலை - பண் - தக்கராகம் - 3.

இம்மாதிரி சத்தில் மனம் நாட்டுவோர் திருவுள்ளமானது இறைவனையன்றி வேறொரு பொருளை யுணராது (திருநின்றவூர் - பண் - நட்டபாடை - 3) அதன் இலக்கணமும், அப்பர் கூறுவதுபோல் 'துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்திடாது' பரவல்,

"எரியுறுநிற இறைவனடி யிரவொடு பகல் பரவுவர்தம
தெரியுறுவினை செறிகதிர்முனை இருள்கெடநனி நினைவெய்துமதே!"
திருக்கழுமலம்-திருவிராகம் - பண் நட்டபாடை - 3.

நான்காவது யோகபூமியாவது சத்துற்பத்தி எனப்படும். சத்தில் மனநாட்டம் நிலைத்த காலை வினை பற்றறுந்து, சத்துதானே வெளியாய் அதன் விருத்தியைக் காட்டும் - இதைப் பிள்ளையார்,

" நாச மாம்வினை நன்மை தான்வரும்
தேச மார்புக ழாய செம்மை "
—திரு இந்திர நீலபருப்பதம் - பண் - இந்தளம் - 4.

என்பர். மற்றும்,

" உண்ணிலா வாவியா யோங்குதன் தன்மையை
விண்ணிலா ரறிகிலார் "
—திருத்தேன்குடித்திட்டை - பண் - கொல்லி - 4.

என்றுங் கூறுகின்றார்.

சத்துற்பத்தி முத்துற்பத்திபோல் அற்புதமானதாதலின், 4-ம் செய்யுட்களில் இப்பிகள் முத்தங்கரை பெய்யும் தோற்றத்தை வைத்துப் பாடுவது முண்டு. (திருத்தெளிச்சேரி - பண் - இந்தளம் - 4) சிவபெருமான் விடமுண்ட பின்னர் பாற்கடலில் அமுதம் வந்த வகையும் இதை யொத்ததே -

ஞானவொளியின் ஆரம்பமும் இதுவேயாம். "கூற்றுதைத்த நீற்றினனைப் போற்றுவார்கள் தோற்றினரே" என்பர் காழியர் கோன்.

ஐந்தாவது யோக பூமியாவது சித்திவெறுப்பு - அஷ்டமாசித்திகளில் அவா பெற்ற யோகிகளுக்குக் கிட்டாத பூமியாகும். இதைத் திருநீற்றுத் திருப்பதிகத்தின் 5-வது செய்யுளில் "பெருந்தவத்தோர்களுக் கெல்லாம் ஆசை கெடுப்பது நீறு" என்றார். இது ஞானமயமான நிலை.

"ஆனி லங்கிளை ரைந்து மவிர்முடி யாடியோர்
மானி லங்கையி னன்மண மார்மங்க லக்குடி
ஊனில் வெண்டலைக் கையுடை யானுயர் பாதமே
**ஞான மாகநின் றேத்தவல் லார்வினை நாசமே**"

**—திருமங்கலக்குடி . பண் - இந்தளம் - 5.**

ஆசை முற்றுங் கெட்ட நிலையாகிய இது காமனுடல்வேவ எரி செய்த கண்ணை யொக்கும் (திருக்கருப்பறியலூர் - திருவிராகம் - பண் - இந்தளம் - 5) ஆதலால் அஷ்டமாசித்திகளை இன்பமாய்க் கொள்ளாது வெறுத்தல் இந்நிலையாகும். "படி முழுதும் விண்முழுதுந் தந்தாலுங்களியாப் பாலருடன் உன்மத்தர் பசாசர் குணம்வருமே" எனத் தாயுமானர் கூறியது போல் இதுவே ஞானத்தின் மூலாதாரவடிவமாகும். இங்கு எல்லாச் சித்திகளினும் மேலானவை நன்கொடையாய் அளிக்கப்படு மென்பது 5-ம் செய்யுளில் பல வகையில் தோற்றுமென்ப :—

"பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
**வடிகோடு தனதடி வழிபடும்** அவரிடர்
கடிகண பதிவர அருளினன் **மிகுகொடை**
வடிவினர் பயில்வலி வலம்உறை இறையே"

**திருவலிவலம் - திருவிராகம் - வியாழக்குறிஞ்சி - 5.**

ஆறாவது யோக பூமியைப் பரநாட்டமின்மை யென்பர் அதாவது,

"தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்



இம்மை வினையடர்ந் தெய்தும் போழ்தினும்
அம்மை யினுந்துணை அஞ்செ ழுத்துமே"

**பஞ்சாக்கரப் பதிகம் - 6.**

என்னும் நோக்குடன் நிற்றல்.

பரநாட்டமாவது, மனம் ஒரு தன்மையதாய் இராமல் பிறந்து பல வகையில் ஓடலாகும். "சீர்கெழு சிறப்போவாச் செய்தவநெறி வேண்டில், ஏர் கெழு மடநெஞ்சே! இரண்டுற மனம் வையேல்!" என்றார். (திருப்பருப்பதம் - பண் - வியாழக் குறிஞ்சி - 6) இது இறைவனை நாயகனாகப் பாவிக்கும் அடியார்கள் பெற வேண்டிய கற்பாகும். இதை நினைப்பூட்டுமாறு கற்புடைய பெண்டிரைக் குறித்த தொடர்மொழிகள் சில 6-ம் பாசுரங்களிற் காணலாம். இக்கற்பனைய பரநாட்டமின்மை வேண்டுமென நாடும் மனவுறுதியுடையோர் தமக்குறும் இடையூறுகளைச் சூரியன் கிரணங்களைத் தடுத்து மூடும் மரக்கிளைகளும் இலைகளும் போன்ற தவக்கிரியைகளால் தடுக்கக் கூடுமென்னும் கருத்துக் கேற்ப சில உவமானங்களும் சில 6-ம் செய்யுட்களில் காணலாம். இதுவே கல்லானீழலில் காட்டிய நிலையுமாகும். "ஆல நீழலுளாய்! அடைந்தார்க்கருளாயே ?" என்னும் கருத்தைப் பல 6-ம் பாசுரங்கள் காட்டும் :—

சுருதிகள் பலநல முதல்கலை துகளறு வகைபயில் வொடுமிகு
உருவிய லுலகவை புகழ்தர வழியொழு குமெயுறு பொறி யொழி
அருதவ முயல்பவர் தனதடி யடைவகை நினையா னுறைபதி
திருவருள் சிவபுரம் நினைபவர் திகழ்குலன் நிலனிடை நிகழுமே.

**—திருச்சிவபுரம் - திருவிராகம் - பண் - நட்டபாடை 6.**

ஏழாவது யோகபூமியாவது விழியாநிலை யெனப்படும். மேலே எடுத்துக் காட்டிய திருச்சிவபுரப்பதிகத்தின் 7-ம் பாசுரத்திற் காணப்படும் "எழிலரி வழிபட அருள் செய்த" பதமும் அதுவேயாகும். இந்நிலை யடைந்தோரையே சித்தி

பெற்றவரெனக் கூறலாமன்றி, அஷ்டமா சித்தி பெற்றவர்களைக் கூறுகின்றது :—

" சுரபுரத்தினைத் துயர்செய் தாரகன் துஞ்சவெஞ்சினக் காளியைத்
சிரபுரத்துளா னென்ன வல்லவர் சித்திபெற் றவரே " [தருஞ்

—திருப்பிரமபுரம் - ஈரடி - பண் - பழம் பஞ்சுரம் 7.

இந்நிலை யடைந்தோர் சீவன் முத்தர் என்பதும், அவர் எவ்வாறு படிப்படியாய் இந்நிலை ஏறுவா ரென்பதும் மற்றொரு திருக்கழுமலப்பதிகத்தின் 7-வது செய்யுளிற் காட்டுகின்றார் :—

பத்திப்பேர் வித்திட்டே பரந்தஐம்பு லன்கள் வாய்ப்
பாலேபோகா மேகாவா பகையறும் வகைநினையா
முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக்கு ணங்கள்வாய்
மூடா வூடா நாலந்தக் கரணமும் ஒரு நெறியாய்ச்
**சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்த மெய்ப்ப ரம்பொருள்**
**சேர்வார் தாமே தானாகச் செயுமவ னுறையுமிடம்**
கத்திட்டோர் சட்டங்கங் கலந்திலங்கு நற்பொருள்
காலேயோவா தார்மேவுங் கழுமல வள நகரே.

—திருக்கழுமலம் - திருத்தாளச்சதி - பண் - வியாழக் குறிஞ்சி 7.

எனவே, யோக பூமிகள் நிலை இவையென முறையே ஒவ்வொரு பதிகத்தின் முதல் ஏழு பாசுரங்கள் பெரும்பாலும் விளக்கும். இவற்றின் தர்க்க ஒழுங்கையும் பொருத்தத்தையும் இனி ஆராய்வோமாக.

உ

சிவமயம்

## காவை - அம்பலவாணத் தம்பிரான்

இயற்றிய

# பிரசாத அகவல்

## உரையுடன்

(மலர் - எ, இதழ் - ௩, கக-ம் பக்கத் தொடர்ச்சி)

தோன்றிய நாத மூன்றங் குலியே
யேன்ற வடிவ மிரண்டு விந்துப்
பேறு மாத்திரை மாகாணி மணியொளி[48]
முயன்றநா தாந்த மூன்றங் குலியே
இயன்ற வடிவோ ரலமொரு விந்துத்
தெய்வஞ் சதாசிவஞ் சேரு மாத்திரை
யெய்திய வரைமா வரைக்காணி யிதனிறம்
இரண்டு மின்னுந் திரண்ட யோனி
மானிட மாகு மலமா மாயை
யானது பிண்ட[49] மண்டமா காசம்

---

[48]தோன்றிய......யொளி - முற்கூறிய நிரோதி கலைக்குமேலே சொல்லப்படாநின்ற நாதகலை மூன்றங்குல வகலமும் உயரமுமுடைத்தாய் மாகாணி மாத்திரையும் பெற்று அதற்குப் பொருந்திய வடிவும் இரண்டு விந்துவையும் இரத்தினப்பிரபை போன்ற நிறத்தையுமுடைத்தாய் விளங்காநிற்கும்;

[49]முயன்ற...பிண்டம் - முற்கூறிய நாதகலைக்கு மேலே சர்வான்மாக்களுக்கும் முயற்சியைக் கொடாநின்ற நாதாந்தகலை மூன்றங்குல அகலமு முயரமு முடைத்தாய் அதற்குப் பொருந்திய வடிவு ஒரு கலப்பையையும் அதிலேயொரு புள்ளியையு முடைத்தாய் அரைமாவரைக்காணி மாத்திரையும் பொருந்தியதற்கு அதிதேவதையான சதாசிவமூர்த்தியையும் மின்திரண்ட பிரகாசம்போன்ற நிறத்தையும் மானுட யோனியையும் மகாமாயை யென்னு மலத்தையு முடைத்தாய் விளங்கும் பிண்டத்தின் கண்ணென்று அறிவாயாக;

நாற்பது நூறு யிரகோடி யோசனை
யேற்ற வகல மிசைந்த வுயர
முந்துவரு கன மைந்து கோடி[50]
நோக்கிய மூன்றுஞ் சூக்கும மாகும்
ஓதுஞ் சாந்தி யதீத கலையே[51]
முதிருஞ் சத்தி சதுரங் குலியே
வடிவொரு கலப்பை நடுவிந்து வாகும்
கலந்த மாத்திரை காணிமுந் திரிகை
யிலங்கிய வொளிநூ றாயிர கோடி
மதிக்கு மாதித்த ருதிக்கு மொளியே[52]
யொப்பில் வியாபினி செப்பிறு லங்குலி
முரண்டெழு சூல மிரண்டு விந்து
வுருவ மாகும் பொருவில் மாத்திரை
யரைக்கா ணிக்கீ ழரையா முரைக்கி
லாதவர் வட்டநூ றாயிர கோடி
சோதி யொளியாந் துளங்கிய பேரொளி
ஓது தெய்வ மாகத சிவமே[53]

---

[50]அண்ட...கோடி - ஆகாச தத்துவத்தில் அண்டத்தை அறியு மிடத்து நாற்பது நூறாயிரகோடி யோசனை அகலமு முயரமு முடைத்தாய் இதிற் பொருந்திய அண்டகடாக...கோடிகனைத்தையு முடைத்தா யிருக்கும்;

[51]நோக்கிய...கலையே - இங்ஙனங் கூறிய ஆகாச தத்துவம் சாந்தியதீத கலையைப் பொருந்தி நிற்குமெனவறிக. முற்கூறிய நிரோதி கலை, நாதகலை,நாதாந்தகலை ஆகிய இம்மூன்றுஞ் சூக்குமமா யிருக்கும்.

[52]முதிரும்...ஒளியே - நாதாந்த கலையின்மேலே முதிர்ச்சியினை யுடைய சத்திகலை நாலங்குல அகலமும் உயரமுமுடைத்தாய் ஒரு கலப்பையும் அதனடுவே யொரு புள்ளியையுமுடைய வடிவினையு முடைத்தாய்க் காணி முந்திரிகை மாத்திரையையும் நூறாயிர கோடி சூரியப் பிரகாசம் போன்ற ஒளியினையும் பொருந்தி விளங்கா நிற்கும்.

[53]ஒப்பில்...சிவமே - மேற்கூறிய சத்திகலைக்கு மேலே நிகரில் லாத வியாபினி கலையைச் சொல்லில் நாலங்குல அகலமுமுயர முடைத்தாய் இரண்டு புறமும் வளைவினையுடைய திரிசூலத்தையும் அதனடுவே இரண்டு புள்ளியையுமுடைய வடிவினையு முடைத்தாய்



தொடுத்த விரண்டுஞ் சூக்குமா சூக்கும
மடுக்கு மியோனி யலகை யாகும்
புலந்தனை யொழிக்கு மலந்திரோ தாயி[54]
தங்குஞ் சமனைமூன் றங்குலி வடிவே
யிங்கிரு குச்சி யிருவிந்து வாகும்
வந்த மாத்திரை முந்திரிகைக் கீழ்க்கால்
துய்யவா தித்தர்நூ றாயிர கோடி
வெய்யி லொளியாம்[55] விளங்கிய வுன்மனை
முடிவிலோ ரங்குலி வடிவு வட்டந்
தெய்வ மநாகத சிவமே யிருணிறம்
மதிக்கும் யோனி துதிக்குந் தெய்வ[56]

---

இணையில்லாத அரைக்காணியின் கீழரை மாத்திரையைப் பொருந்தி விளங்காநின்ற ஒளியைச் சொல்லில் நூறாயிர கோடி ஆதித்த மண்டலம் பிரகாச மவ்வளவு பெரிய ஒளியினையுமுடைத்தாய் அதற்குச் சொல்லிய அதிதேவதையாகிய ஆகத சிவத்தையும் பொருந்தி விளங்காநிற்கும்.

[54]தொடுத்த...திரோதாயி - முற்கூறிய சத்திகலை வியாபினி கலையாகிய இரண்டும் புத்திதத்துவ புலனத்திலிருக்கும் பைசாச யோனியையும் பக்குவான்மாக்களைப் புலன்களின் வழிச் செல்லாமல் நிறுத்துந் திரோதாயி என்னும் மலத்தையு முடைத்தாய்ச் சூக்குமத்திற் சூக்குமமா யிருக்கும்.

[55]தங்குஞ்...ஒளியாம் - வியாபினி கலைக்கு மேலே இருக்குஞ் சமனைகலை மூன்றங்குல அகலமு முயரமு முடைத்தாய் அதற்குப் பொருந்திய வடிவமிரண்டு குச்சியினையும் அவைகளின் முடிவிலே இரண்டு விந்துவினையும் பொருந்தி அதற்கு வருதற்குரித்தாகிய முந்திரிகைக் கீழ்க்கால் மாத்திரையும் பெற்று நூறாயிர கோடி சூரியப் பிரகாசம்போன்ற நல்ல நிறத்தினையு முடைத்தாய் விளங்கா நிற்கும்.

[56]விளங்கிய.....தெய்வம் - முற்கூறிய சமனைகலைக்குமேலே உன்மனைகலை ஓரங்குல உயரத்தினையும் வட்டம்போன்ற வடிவினையும் நிச்சயித்த கறுத்த நிறத்தினையும் துதித்தற்கு உரித்தாகிய தெய்வ யோனியையு முடைத்தாய் அதற்கு அதிதேவதையாகிய அநாகத சிவத்தையும் பொருந்தி விளங்கா நிற்கும்.

றிவ்வகை யிரண்டு மிவையதி சூக்குமஞ்[57]
செப்பி லோரம்முத லிப்பதி ஞலு*
மந்திர கலையா[58] மலவா ணவமாம்
நந்திய பாச சாலம் நவிலில்[59]
மேலு முறைசெய்வன்[60] நாலு சத்தி
வினவிய வியோம ரூபிணி யனந்தை
யனுதை யனுசிருதை[61] யடைவோ ரங்குலி
விந்து வடிவே யந்த வம்பர
மளக்க ராடி சாற்கா லத்தி
லுதய மதியம்நா ருயிர கோடி
கதிரொளி திரண்ட காட்சி யொளியே
விரவிய தெய்வம் பரசிவ மாகும்[62]

---

[57]இவ்வகை...அதிசூக்குமம் - முற்கூறிய சமனையுன்மனு கலையாகிய இவை யிரண்டும் அதிசூக்குமமா யிருக்கும் ; [இனி மேற் சம்பிரதாய விரோதம். மூலம் பேதியாமல் அர்த்தஞ் செய்தபடி.]

[58]செப்பி...யாம - முற்கூறிய மேதாகலை முதலாக மேற்சொல் லப்படாநின்ற அனந்த கலை யீருக இந்தப் பதினுலும் மந்திரகலையா மென அறிவாயாக ;

[59]மலம்...நவிலில் - ......ப்பதினுலையும் விசாரித்துச் சொல்லில் ஆன்மாக்களுக்குத் துயரத்தைக் கொண்......கின்ற ஆணவம்...... பொருந்துதலாற் பாசசால மெனப்பெறும். அஃதெக்காரணத்தா லெனின் ஆன்மாக்களைச் செனன மரணத்து அடைவிப்பிக்கையா லெனவறிக;

[60]மேலு முறை செய்வன் - அந்தக் கலைகளிற் குறையை யப்பா லுஞ் சொல்வாம். அந்தக் கலை யாதெனில் ;

[61]நாலு...யனுசிருதை - வியோம ரூபிணீ, அனந்தை, அனுதை, அனுசிருதை எனச் சத்தி சொரூபமாகக் கூறிய கலைகள் நாலும் ;

[62]அடை...மாகும் - இங்ஙனங் கூறிய வியோம ரூபிணி முதலிய கலைகள்நான்கும் ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு அங்குலத்தையுமுடைத் தாய் வட்டம் போன்ற வடிவையும் அதற்கு மேலாய் நின்மலா காசத்தை விசாரிக்கிற் கண்ணுடிப் பிரபை போன்று சரற்காலத்தி லுதிக்கும் நூருயிர கோடி சந்திர பிரபை திரண்ட ஒளியினையு

* பதினுறு என்றும் பாடம்.



பேச வரிய மாசூக் குமமே[63]
நாலுந் தியான[64] மேலுப தேசம்
புண்ணிய குருவின் றண்ணளி தருமே[65]
அடுத்தொளிர்மும் மண்டலமா ராதார மப்பா
லடுத்தவிர லாறிரண்டுக் கப்பா—லடுத்தவொளி
யம்பலத்தின் றடியகூத் தானந்தங் கண்டிருப்பா
ரம்பலவன் றாளேத்து வார்.

பிராசாத அகவல் முற்றிற்று

---

## பிராசாத அகவல் நூலாசிரியர் வரலாறு

'சங்கரனையடையு நன்மார்க்கம் நாலிவைதான் ஞானயோக நற்கிரியாசரிவை' என்று நவிற்றுவர் பெரியார். இவற்றுள் யோக மார்க்கம் பலதிறப்படும். அவற்றுள் ஒன்று பிராசாத மார்க்கம். இந் தப் பிராசாத மார்க்கமும் பலதிறப்படும். வடமொழியிலே பிராஸாத ஷட்ச்லோகி என்று பெரிய வியாக்கியையோடு கூடிய நூலொன்று உண்டு. தமிழிலே பிராசாததீபம், பிராசாதமாலை, பிராசாத விருத்தம்,

---

முடைத்தாய் இதற்கதிதேவதையாகிய பரமசிவனையும் பொருந்தி விளங்கா நிற்கும் ;

[63]பேச...சூக்குமமே - இந்தக் கலைகளையுந் தரிசிக்கிற் சொல்லு தற் கரிதாகிய மகா சூக்குமமாயிருக்கும் ;

[64]நாலும் தியான (ரூபகம்) - இங்ஙனம் மகா சூக்குமமெனக் கூறிய சத்திகணாலுந் தியானிக்கப்படுமவைகள் ;

[65]மேலும்...தருமே - இதற்கு மேலே உபதேசப் பொருளாகிய பரமசிவம் ஞானுசாரியாது திருவருளைப் பெற்றவர்களுக்குச் சிவாணு பூதியினுல் அறியப்படும். மேற் றெளிவு செய்யுளுணர்த்துகிறூர்.

அடுத்...வார் - அனவரதமும் திருவம்பலத்திற் றிருநடஞ் செய்யாநின்ற ஆனந்தத் தாண்டவத்தைத் தரிசித்துக் கொண்டிருக் கும் ஞாதாக்கள் ஆறுதாரத்தையும் அதற்கதற்குக்கூறிய பிரகாசங் களையும் நாபி தேசத்திலிருக்கும் அக்கினி மண்டலத்தையும் இதயத் திலிருக்கும் சூரிய மண்டலத்தையும் புருவ மத்திமையிலிருக்குஞ் சந்திர மண்டலத்தையும் நாபி முதலிய தானங்களுக்குச் சொன்ன அங்குலங்களையும் உன்மனுகலைக்கு மேலாகச் சொல்லா நின்ற மகா சூக்குமமாகிய சத்திகள் உட்டியானத்தையும் அதற்கு மேலாகிய ஞானுசுத்தத்தையுந் தெரிசித்துக்கொண்டிருப்பார்கள் எ - று.

பிராசாத அகவல் போன்ற பல நூல்கள் உண்டு. அவற்றுள் இந்தப் **பிராசாத அகவல்** சைவசித்தாந்த சாத்திர நூலுணர்ச்சி மிக்குடைய காவை அம்பலவாணத் தம்பிரானால் செய்யப்பட்டது. காவை என்ற ஊர் திருப்பரங்குன்ற நாட்டிலுள்ளது.

அம்பலவாணத் தம்பிரானைக் குறித்து வேறு ஒன்றும் அறிய இயலாவிடினும், இருபா இருபஃது உரையிலே 'இந்நூலுக்கு வியாக்கியை செய்யவேண்டினது கொண்டு மெய்கண்ட சந்ததியில் காவை அம்பலநாதத்தம்பிரான் திருவடிமரபிலாரில் மதுரை ஞானப்பிரகாசத் தம்பிரான் திருவடியைப்பெற்ற சிவப்பிரகாச ஞானப்பிரகாசத் தம்பிரானார் கடாட்சித்த உபதேச சம்பிரதாயத்தைச் சகாத்தம் 1410-ன் மேற்செல்ல நின்ற காலத்திலே வியாக்கியை செய்ததென அறிக' என்று காணப்படுவதால், இவர் ஒரு சம்பிரதாயத்தை உண்டாக்கினவரென்றும், கி. பி. 15-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் வாழ்ந்தவரென்றும் அறிகிறோம்.

இந்த அகவலுக்கு ஒரு சிறந்த உரை எழுதப்பட்டுளது. அந்த உரையைச் செய்தவர் ஊர் பெயரொன்றும் குறிக்கப்படவில்லை. இவ்வுரையின்றேல் அகவலின் பொருள் விளக்கமாகாது. அகவல் மூலமட்டும் **செந்தமிழ்** மூலமாக இரண்டாண்டுகட்கு முன்னர் வெளிவந்தது; இப்பொழுது உரையுடன் வெளியிடப்படுகிறது.

# திருநீற்றின் சிறப்பு

(S. A. அமிர்தகடேசுவரபிள்ளை, வேளான்கண்ணி)

"சான்ற நூல் புகல் சர்வ சங்கார காலத்திற்
றோன்றும் யாவையுந்தன்னுதல் விழியாற் றொலைத்து
நான்றவார் குழைபாகனம் மயானத்து நடித்தான்
ஆன்ற நீறெலாந் தோய்ந்திட மேனியில வற்றை"

"திருக் கரத்தினால் வழித் தெறிந்தனன்றிகழ் விடைமுன்
விருப்பினா லவையயின்றந்த விடைதன் வீரியத்தை
யருப்பமீக் கொளப் பசுக்கள் பால் விட்டதப் பசுக்கள்
பெருக்கு கோமயம் விபூதிக்கு விசேடம் பேசினவால்."

**உ**லகம் உய்வான்வேண்டி ஸ்ரீ சிவபிரான் சர்வசங்கார காலத்திலே தம் நுதல் விழியினிடமாயுள்ள அக்கினியினாலே எல்லாப் பொருட்களையும் நீறாக்கி, அந்நீறு தம்



திருமேனி முற்றுந் தோயுமாறு திருநட்டஞ் செய்து முடிவில் உலகத்திலுள்ள யாவற்றையுந் தோற்றுவித்துத் தமது திருமேனியிற் படிந்திருந்த திருவெண்ணீற்றைத் தம் திருக்கரத்தால் வழித்து தம் வாகனமாகிய இடபத்தின் முன் எறிந்தனர். அம்மால்விடை, அதனையுட் கொண்டு தனக்குப் பக்கத்திலிருந்த நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்னும் ஐவித ஆவினிடம் விட்டது. அக்கோக்கள் ஸ்ரீ சிவபெருமானாலே திருப்பாற் கடலிலிருந்து, சிவபூசையின் பொருட்டும் மற்றயாகாதிகளின் பொருட்டும் இப்பூமியின்கண் தோன்றின. அதனால் ஆவின்சாணம் விபூதிக்கு மூலமாயிற்று. கடையூழியில் ஸ்ரீ சிவநாதன் தம் பால அக்கத்தால் (நெற்றிக்கண்ணால்) சகல பொருட்களையும் இமையோரையும் சாம்பராக்கித் தம் திருமேனி முற்றும் பூசிக்கொண்டு நட்டமாடியும், பின்னர் முன்போல சகல அண்ட சரா சரங்களையும் தோற்றுவித்தனர். அமரர்கள் முற்கூறிய பசுக்களின் அவயவங்களில் வசிக்கப் பெற்றலால் அன்னவற்றின் சாணத்தை நீறாக்கி யாவரும் பூசிக் கொள்ளும் படி விதித்தருளினர். இதனாலும் ஆவின்சாணம் விபூதிக்கு மூலமாயிற்று. எனவே, இதுவும் சிவசின்னங்களில் மிகமுக்கியமெனினுமாம்.

விபூதி பின் வருமாறு பெரும் பிரிவினை யுடையது:—விபூதி, வைதிக விபூதி, இலௌகிக விபூதி என்றும், வைதிக விபூதி புராதனி, சத்தியோசாதை என்றும், இலௌகிக விபூதி சைவ விபூதி அசைவ விபூதி என்றும், சைவ விபூதி கற்பம் அநுகற்பம் சூபகற்பம் என்றும், அசைவ விபூதி அகற்பம் என்றும் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் வைதிக விபூதியில் புராதனியும் சத்தியோ சாதையும் பிரமன்யாக குண்டத்திலுண்டாவன இவை இரண்டையும் மறையோர் முதலிய மூன்று வருணத்தார்களும் அணியத் தகும். இலௌகிக விபூதியில் சைவவிபூதி அசைவ விபூதி என இருவகையுண்டு. இவற்றுள்ளும் சைவ விபூதியில் 'கற்பம்' 'அநுகற்பம்' 'சூபகற்பம்' என முப்பிரிவுகள் உள்ளன.

(க) கற்பம் :—ஈனாததும், சூலுடையதும், இரட்டைக் கன்றீன்றதும், முதிர்ந்த கன்றுடையதும், கன்றிழந்ததும், நோயுடையதும், மலடும், மலந்தின்பதும், வளைந்தகாலுள்ளதும், கொம்பொடிந்ததும், வாலற்றதும், வயது முதிர்ந்தது மாகிய இவைபோன்ற குற்றங்களின்றி வயலில் நெற்றாள் மேய்ந்துவரும் பசுக்களின் சாணத்தைப் பங்குனி மாதத்து அட்டமி சதுர்த்தசி பௌர்ணமி என்னும் திதிகளிலே பூமியின்கண் வீழ்வதன்முன்னர் சத்தியோசாத மந்திரஞ் செப்பித் தாமரை யிலையிலேனும்,வாழை பலாசு முதலிய இலைகளிலேனும் வாங்கி வழும்பு போக்கி வாம மந்திரங் கூறிப் (பால், தயிர், நெய், கோசலம், கோமயம்) பஞ்சகவ்வியம் பொழிந்து, அகோர மந்திரமொழிந்து, பிசைந்து, தத்புருட மந்திரஞ் செபித்துக் கைகொண்டளவும் உருட்டி வெயிலிலுலர்த்தியேனும் உலர்த்தாமலேனும் ஓமத்தீயாகிய சிவாக்கினியிலிட்டு நன்றாக வேகவைத்துச்சூடுமுற்றும் தணிந்தாறியபின் ஈசான மந்திரம் புகன்று எடுத்துப் புது வத்திரத்தினால் வடிக்கட்டிப் புது மட்பாண்டத்துட் புகுத்து, காயத்திரி மந்திரஞ் செபித்துச் சுத்தமான தானத்திருத்தி மல்லிகை முல்லை முதலிய நறுமலர்ப் பெய்து புதுத் துணியால் வாயைக் கவசஞ் செய்து வைத்துக் கொள்வது.

அநுகற்பம் :— அநுகற்பமாவது வனத்திலும் பசுமந்தையிலும் விழுந்து உலர்ந்து கிடக்கும் சாணத்தைச் சித்திரைத் திங்களிலே சத்தியோசாத மந்திரஞ் செபித்து எடுத்து வந்து பொடித்து பஞ்ச கவ்வியம் வார்த்து அகோர மந்திர மோதிப் பிசைந்து, தத்புருட மந்திரம் புகன்று கை கொண்டளவு உருண்டைகள்செய்து வெயிலில் உலர்த்தியேனும் உலர்த்தாமலேனும் சிவாக்கினியிலிட்டு நன்றாக வேகவைத்துச் சூடு முற்றுந் தணிந்தாறியவுடன் ஈசான மந்திரம் புகன்று எடுத்துப் புதுவத்திரத்தினால் வடித்துப் புதுப்பாண்டத்துள்ளிட்டுக் காயத்திரி மந்திரஞ் செபித்து சுத்தமான தானத்திருத்தி சுகந்த புட்பங்களிட்டுப் புதுத் தானையால் வாயைக் கவசஞ் செய்து கொள்வது.



உப கற்பம் :—உபகற்பமாவது, வனத்தில் இரவியின் தீயால் இயல்பாகவே வெந்து கிடக்கும் சாம்பலைச் சத்தியோசாதம் புகன்று எடுத்து வந்து, வாமமந்திர மொழிந்து பஞ்ச கவ்வியம் பொழிந்து அகோர மந்திரமோதிப் பிசைந்து உருண்டைகள் செய்து சிவாக்கினியிலிட்டுப் பற்பமாக்கி, ஈசான மந்திரம் புகன்று எடுத்துப் புதுத் தூசினால் வடித்துப் புதுப்பாண்டத் துள்ளிட்டுச் சாதிமுல்லை யாதிய போதினைத் தூவி சுத்தமான தானத்திருத்துதலும் காயத்திரி நவிலுதலுமாம்.

மேற்கூறிய இம்மூவகை விபூதியும் சிவதீக்கை பெற்ற எல்லா வகுப்பினரும் அணியத் தக்கது.

# அப்பரது கடவுட் கொள்கை

[பெ. கோவிந்த மூப்பனார், கொடுமுடி]

(மலர் - எ, இதழ் - ங, அo-ம் பக்கத் தொடர்ச்சி)

கடவுள் படைத்தல் காத்தல் அழித்தல் என்ற முத்தொழிலை மட்டும் செய்கின்றான் என்பதில்லை. பொருள்கள் கடவுளால் படைக்கப்படுதல் காக்கப்படுதல் அழிக்கப்படுதல் என்ற முத்தொழிற்படுதல் மட்டும் அடைகின்றன என்பதுமில்லை. பொருள்கள் அசைய வேண்டின் கடவுள் அவற்றை அசைவிக்கிறான்; ஆடவேண்டின் ஆட்டுகின்றான்; இருக்க வேண்டின் இருத்துகின்றான்; எழவேண்டின் எழுப்புகின்றான்; உண்ணவேண்டின் உண்பிக்கின்றான்; உறங்கவேண்டின் உறங்குவிக்கின்றான்; பொருள்கள் மற்றும் எவ்வெத் தொழில்களைச் செய்யவேண்டுமோ அவ்வத் தொழிலைக் கடவுள் செய்விக்கின்றான். அவன் செய்யாமல் அவை செய்வன அல்ல. "அவனன்றி யோரணுவும் அசையாது" என்னும் பழமொழியும் இக்கருத்துப்பற்றியதே. பொருள்களை இவ்வாறு செய்விக்கும் கடவுள் தொழிலுக்குக் "காட்டும்உதவி" என்று பெயர். பொருள்களுக்கு வேறாக இருந்து அவற்றை

அசைவித்தல் முதலிய செய்தல்போல அவை அசைதற்கும் அவற்றின் உடனாயிருந்து கடவுள், அசைதல் முதலியனவும் செய்கிறான். கடவுள் அசைதல் முதலிய செய்யவே பொருள்களும் அசைதல் முதலிய தொழில்களைச் செய்கின்றன. பொருள்களோடு உடனாயிருந்து செய்யும் கடவுள் தொழிலுக்குக் "காணும் உதவி" என்று பெயர்.

" ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகாதாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே"

என்ற பாட்டில் மேற்கூறிய கருத்துக் காணப்படுதல் காண்க.

தானல்லா உடம்பைத் தான் என்றும், தன்னோடியை பில்லாத பொருளைத் தன்னுடையது என்றும் எண்ணி இறைவன் தன்னை இயக்கவே தான் இயங்குதலை அறியாது, செய்த தொழில் தன்னால் செய்யப்பட்டது என்று நினைப்பதினாலேயே உயிர்க்கு வினை ஏற்படுகின்றது. தன்னியல்பையும், தன்னோடியைபில்லாத பொருளினியல்பையும், தனது தலைவன் இயல்பையும் உள்ளவாறுணர்ந்து, தலைவன் இயக்கவே தான் இயங்குதலை அறிந்து, செய்த செயல் தலைவன் செய்விக்கச் செயப்பட்டது என்று நினைக்க, உயிர்க்கு வினை ஏற்படுதலில்லை. வினை ஏற்படாதவாறு, எல்லாம் இறைவன் செயல் என்று முனைப்பின்றி ஒழுகுதற்கு ஏகனாகி இறைபணி நிற்றல் என்று பெயர்.

திருநாவுக்கரசு நாயனார் முப்பொருள்களின் இயல்புகளை முற்றும் உணர்ந்தவராகையால், தம் வாழ்க்கையில் நிகழ்ந்த செயல்களை எல்லாம் இறைவனே செய்வித்தான் என்று கூறுகிறார். தம்மை இறைவனே சமண சமயத்தில் புகுத்தினான் என்றும், சைவசமயத்தில் சேர்ப்பதற்குத் தமக்குச் சூலை



நோயைக் கொடுத்தான் என்றும், கொடுத்தபின் அதனை நீக்கினான் என்றும், இறைவனே தம்மைப் பணிவித்தான் என்றும், இறைவனே தம்மைப் பாடுவித்தானென்றும் அடிகள் கூறுதலைப் பின்வரும் செய்யுள்களிற் காண்க.

" பெருகு வித்தென் பாவத்தைப் பண்டெல்லாம்
குண்டர்கள் தம் சொல்லே கேட்டு
உருகு வித்தென் உள்ளத்தி னுள்ளிருந்த
கள்ளத்தைத் தள்ளிப் போக்கி
அருகு வித்துப் பிணிகாட்டி ஆட்கொண்டு
பிணி தீர்த்த ஆரூரர் தம்
அருகிருக்கும் விதியின்றி அறமிருக்க
மறம் விலைக்குக் கொண்டவாறே"

" பந்தமறுத் தாளாக்கிப் பணிகொண் டாங்கே
பண்ணிய நூல் தமிழ் மாலை பாடுவித்தென்
சிந்தை மயக் கறுத்த திருவருளினானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே"

" பத்திமையால் பணிந்தடியேன் தன்னைப் பன்னாள்
பாமாலை பாடப்பயில் வித்தானை"

நாயனார் சைவசமயஞ் சார்ந்து சிவபெருமானைக் கடவுளாகக் கொண்டபின், அக்கடவுளுக்கே தொண்டு செய்து, தம் முதுமையின் பிற்காலப் பகுதியைக் கழித்தார். அக்காலமே பயனுள்ள காலமென்றும் அக்காலத்திற்கு முற்பட்டகாலம் பயனில்லாக் காலமென்றும் அடிகள் கருதினார் என்று முன்னர்க் கூறினோம். உடம்பும் உறுப்புகளும் நாட்களும் இறைவனை வணங்கிப் பயன் பெறவே தமக்குக் கொடுக்கப்பட்டன என்ற உண்மையுணர்ந்தபின் முற்பகுதியைப் பயனின்றிக் கழித்தாற் போல பிற்பகுதியையும் பயனின்றிக் கழிக்க எண்ணினாரில்லை. உடம்பாலும் உறுப்புக்களாலும் இறைவனுக்குத் தொண்டு செய்தே ஒவ்வொரு நொடியையும் கழித்தாரென்பது அவர்பாடலிலிருந்து நாம் அறியலாம்.

" என்கடன் பணிசெய்து கிடப்பதே"

" அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ

"தொண்டனேன் உன்னையல்லால் சொல்லுயாசொல்லிலேனே"

"நீதியால் உன்னையல்லால் நினையுமா நினைவிலேனே."

"ஈசன் ஈசன் என்று என்றும் அரற்றுவன்
ஈசன்தான் என் மனத்திற் பிரிவிலன்
ஈசன் தன்னையும் என் மனத்துக் கொண்டு
ஈசன் தன்னையும் யான் மறக்கிற்பனே."

"பைம்மாலும் அரவா பரமாபசு
மைம்மால் கண்ணியோடேறு மைந்தாஎனும்
அம்மாலல்லது மற்றடிநாயேற்கு
எம்மாலும் மிலேன் எந்தை பிரானிரே"

என்பனவற்று லறிக.

தொண்டு புறத்தொண்டு அகத்தொண்டு என இரு வகைப்படும். புறத்தொண்டாவது தலை கண் வாய் கை கால் முதலிய புற உறுப்புக்களால் இறைவனுக்குச் செய்யுந் தொழில். அகத்தொண்டாவது மனமாகிய அகவுறுப்பாலும் அறிவாலும் இறைவனுக்குச் செய்யுந் தொழில். நாயனார் தமது தலையால் சிவபெருமானை வணங்கினார் என்றும், கண்களால் கண்டாரென்றும், வாயால் பாடினார் என்றும் கைகளால் தொழுதாரென்றும், கால்களால் அப்பெருமான் எழுந்தருளி யிருக்கும் இடங்களுக்குச் சென்று அவனை வலம் வந்தாரென்றும் அவர் பாடலிலிருந்து நாம் அறியலாம். தலை முதலிய எல்லா உறுப்புகளுக்கும், அததற்குரிய தொழிலை இறைவனைக் குறித்தே தொழில் செய்யுமாறு நாயனார் கட்டளையிட்டிருக்கிறார். அவ்வாறு கட்டளையிட்டுப் பாடிய பாடலே திருவங்கமாலை. அகத்தொண்டைப் பற்றிப் பின்னர்க் கூறுவாம்.

நாயனார் சமயத்தொண்டைக் கைக்கொண்டதுபோலவே சமய ஒழுக்கத்தையும் கைக்கொண்டவராகக் காணப்படுகிறார். வைகறையில் எழுதல், நீராடுதல், திருநீறணிதல், மலரெடுத்தல், மாலை தொடுத்தல், கோயிலுக் கலகிடுதல், மெழுக்கிடுதல், விளக்கிடுதல், தூபமிடுதல், பாடுதல், ஆடுதல் முதலிய புறவொழுக்கங்கள் அடிகள் பாடல்களில் காணப்படுகின்றன.



"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சேநீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றிஎன்றும்
அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதீஎன்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே"

"பெரும்புலர் காலைமூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள்கொண் டாங்கார்வத்தை யுள்ளேவைத்து
விரும்பிநல் விளக்குதூபம் விதியினாலிட வல்லார்க்குக்
கரும்பினில் கட்டிபோல் வார்கடவூர் வீரட்டனாரே"

இப்பாடல்களில் மேற்கூறிய ஒழுக்கங்கள் காணப்படுதல் காண்க.

மெய் கூறல், பொய் கடிதல், பொறுத்தல், நிலையாமையுணர்தல், உலகப் பொருள்களையும் உடம்பையும் துறத்தல், உலகப்பற்றை நீக்கி இறைவனைப் பற்றுதல் முதலிய அக ஒழுக்கங்களும் அடிகளிடம் காணப்படுகின்றன.

"மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறைஎனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்பா ராகில் சிவகதி விளையு மன்றே"

"தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமாம் இதற்கேதும் மகிழ வேண்டாம்
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவுந் திளைக்கும் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்க லாமே"

"மண்பாதலம் புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர் வீழினும் அஞ்சல்நெஞ்சே
திண்பாநமக் கொன்று கண்டோம் திருப்பாதிரிப் புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே"

இவற்றில் அடிகளது அகவொழுக்கம் காணப்படுதல் காண்க.

திருநாவுக்கரசு நாயனார் உண்மையான புறத்தொண்டையும் உண்மையான அகத் தொண்டையும், உண்மையான புறவொழுக்கத்தையும் உண்மையான அகவொழுக்கத்தையும் உடையவர். தாம் சமண சமயத்திலிருக்கையில் போலித் தொண்டையும் போலி ஒழுக்கத்தையும் கொண்டு காலங் கழித்ததற்கே கழிவிரக்கம் கொள்ளுகிறார். போலித் தொண்டையும் போலி ஒழுக்கத்தையும் கொண்டு ஒழுகியதற்கே சமணர்களைப் பலவிடங்களிலும் அடிகள் வெறுத்துப் பாடுகிறார். போலித் தொண்டையும் போலி ஒழுக்கத்தையும் ஒழித்து உண்மையான மனத்தோடு உண்மையான தொண்டையும் ஒழுக்கத்தையும் பின்பற்றுமாறு தமக்கு அருள்செய்யும்படி,

“சிந்தையைத் திகைப்பியாதே செறிவுடை அடிமை செய்ய
எந்தை நீ அருளிச் செய்யாய்”

என்றும்,

“பொய்யினைத் தவிர விட்டுப் புறமலார் அடிமை செய்ய
ஐய நீ அருளிச் செய்யாய்”

என்றும் நாயனார் வேண்டிக் கொள்கிறார். உண்மையான மனத்தோடு செய்யும் தொண்டும் ஒழுக்கமுமே பயனுடையன. உண்மையான மனத்தோடு செய்யாத எத்தொண்டும் எவ்வொழுக்கமும் பயனில என்று நாயனார்கூறுதலைப் பின்வரும் பாடல்களிற் காண்க.

“நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்
பொக்கமிக்கவர் பூவும் நீருங் கண்டு
நக்கு நிற்பன் அவர்தமை நாணியே”

“கோடிதீர்த்தம் கலந்து குளித்தவை
ஆடினாலும் அரனுக் கன்பில்லை யேல்
ஓடு நீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடிவைத்திட்ட மூர்க்கனோடொக்குமே”



**உரை :**—துளைகளுள்ள தசையைச் சுவராகவுடையதாய்ப் புழுக்களினாலே வேயப்பெற்று, வலியற்று நிணநீர் வடிகின்ற நிலையற்ற கூரையை உடையது (இவ்வுடம்பு.) இதனை நிலைத்தபொருளாக எண்ணித் துன்பக்கடலின் சுழியில் அகப்படுவேனை, மணிகளுட் சிறந்த பெருமணியாகிய முத்து, மாணிக்கம், வயிரம், பவளம் இவற்றின் முழுவொளியுங் கலந்தாற்போன்ற திருமேனி உடைய அப்பன், ஆட்கொண்டு தன்னடியாரோடு சேர்ப்பித்த வியப்பினை யறிந்தோமே.

**குறிப்பு :**—உடம்பகத்தே உள்ள தசையைச் சுவராகவும் தோல் முதலியவற்றைக் கூரையாகவுங் கூறினர். முத்து, வைரம் என்பவற்றின் நிறம் திருவெண்ணீற்றி னொளிக்கும், மாணிக்கம் பவளம் என்பவற்றின் ஒளி திருமேனியின் ஒளிக்கு முவமைகளாயின. மாமணி முத்து எனமாறுக. இதை என்பது இத்தை என விரிந்தது. பொத்தை யென்பதற்குப் பருத்தது எனவுங் கூறுப. எ

நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை குரம்பையிற் புகப்பெய்து, நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து நுகமின்றி விளாக்கைத்துத், தூக்கி முன்செய்த பொய்யறத் துகளறுத் தெழுதரு சுடர்ச்சோதி, ஆக்கி ஆண்டு தன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

**உரை நடை :**—எழுதரு சுடர்ச்சோதி என்பதை முதலிற் கொள்க.

**உரை :**—எழுந்து விளங்கித் தோன்றும் பிழம்புபோன்ற ஒளியுருவனாகிய பெருமான், முன்னாளிலே தன்னுட னில்லாதபடி என்னை விலக்கிச் சிறுகுடிலாகிய உடம்பினுட் புகுத்தி இப்பிறவியிலே தக்கபருவத்திலே திருவருட் கண்ணால் பார்த்து நுட்பத்தை உணர்த்துவதாகிய நொடிப்பொழுதில் சொல்லப்படுஞ் சொற்போன்ற உபதேசமொழி யுரைத்து, நுகத்தடியாகிய தொடர்பில்லாமல், (திருவடியிலே) என்னைப் பூட்டிப் பிறவிக்கடலி லிருந்து மேலே தூக்கி உபதேசம் பெறுதற்கு முன்செய்த பயனில் செயல்கள் ஒழியும்படி பாசமாகிய குற்றத்தைத் தொலைத்து வீட்டிற் குரியவனாக்கி என்னை

யாட்கொண்டருளித் தன்னடியாருடன் சேர்த்த வியப்பினை யறிந்தோமே.

**குறிப்பு :**—இறைவன் தன்னொடு நின்றது என்றது, முற்பிறவியில் கயிலையிலிருந்தமையைக் குறிக்குமென்றும், கேவலநிலையிலிருந்தமையைக் குறிக்குமென்றுங் கூறுப. நொடியன என்பதில் நொடி=கைநொடிப் பொழுதில் கூறப்படுஞ் சொல். அன=அன்ன போன்ற,அத்தகைய சொல்லினை "ஓம்"என்ப. சொல்லின்பொருளை உள்ளத்திற் பதியவைத்தமையாற் 'சொற்செய்து' என்றார். நுகம்=வண்டியிற் காளைகளைப் பூட்டும் மரத்தடி. 'நுகமின்றி' என்றது சுட்டறிவின் றொடர்பின்றி. விளாக் கைத்து=சேர்த்து, பூட்டி, கலக்கச்செய்து. விளாக்கை=விளாவுதல், கலத்தல். விளாக்கை என்பது வினையாக வழங்கப்பட்டது. பொய்=பயனில் செயல். துகள்=குற்றம். அ

உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர் எழுதரு நாற்றம்போற், பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள் அப்பொருள் பாராதே, பெற்றவா பெற்ற பயனது நுகர்ந் திடும் பித்தர்சொல் தெளியாமே, அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

**உரை :**—(வினைக்கு ஈடாக) வந்தடைந்த வுடம்பின் மேலான பலன், வாசனையுடைய பூவின்கண் கண்ணால் பார்க்கப் படாது எழுகின்ற வாசனைபோல, ஐம்புலனால் பற்றப்படுவதோர் தன்மையிலாத மேலாகிய மெய்ப்பொருளைக் காணுதல். அம்மெய்ப் பொருளைக் காண முயலாது வினைக்கேற்றபடி கிடைத்த வினைப்பயனைக் கிடைத்த முறையே அநுபவித் தொழியும் அறிவீனர் பேச்சுகளை நம்பாதிருக்குமாறு, அப்பன் என்னை யாட்கொண்டு தன்னடியாருடன் சேர்ப்பித்த வியப்பினை யறிந்தோமே.

**குறிப்பு:**—உறுபொருள்=மிகுந்த பயன். மலர்எழுதரு நாற்றம் பற்றப்படுவதுபோல் பற்றமுடியாத தன்மையுடைய பரம்பொருள் என்று கூறுவாருமுளர். பெற்றவா வென்பதை நுகர்ந்திடும் என்பதனோடு முடிக்காமல், பெற்ற என்பதனோடு முடித்து அடைதற்



குரிய முறையிலே யடைந்த எனப் பொருள் கொள்வது முண்டு. பித்தர்=அறிவீனர். ௯

இருள் திணிந்தெழுந் திட்டதோர் வல்வினைச் சிறுகுடில் இதுஇத்தைப், பொருளெனக்களித் தருநரகத்திடை விழப் புகுகின்றேனைத், தெருளும் மும்மதில் நொடிவரை யிடிதரச் சினப்பதத் தொடுசெந்தீ, அருளும் மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய அதிசயங் கண்டாமே.

**உரை:**—அறியாமையாகிய ஆணவமலச் செறிவால் ஏற்பட்டதாகிய, கொடிய வினைகளாலமைந்த சிறிய குடிசை இவ்வுடம்பு, இதனை நிலைப் பொருளாக எண்ணி மகிழ்ந்து கடத்தற் கரிய நரகத்தினிடை விழப்போகு மென்னை, தெளிவாக விளங்குஞ் சுவர்களையுடைய முப்புரமானது நொடிப்பொழுதி லிடிந்து விழும்படியாகக் கோபக் குறிப்பொடு செந்நிறமான தீயாகிய அம்பை விடுத்தருளிய உண்மைவழியே வடிவமாக வுடையவன், எனது பொய்வழியைத் தொலைத்த வியப்பினை யறிந்தோமே.

**குறிப்பு :**— இருள்=அறியாமைக் கேதுவாகிய ஆணவத்தை யுணர்த்தும். திரிபுணர்ச்சியை யுண்டாக்கும் மாயையினை இருளென்பாருமுளர். திணிந்து=மிகுந்து. வினைப்போகமே தேகமாதலின் வல்வினைச் சிறுகுடி லென்றார். இரும்பு, வெள்ளி, பொன் இவற்றாலாகிய சுவர்களை முப்புரங்கள் உடையவாயிருந்தன. அவை ஆகாயத்தில் விளங்கினபடியால் தெருளும் மதிலென்றார். மதில்=கோட்டைக்கு ஆகுபெயர். பதம்=அடையாளம். நெறி யென்பது ஆகுபெயர். ௰

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

# புணர்ச்சிப்பத்து

## அத்துவித இலக்கணம்

### ஆசிரிய விருத்தம்

*திருச்சிற்றம்பலம்*

சுடர்பொற் குன்றைத் தோளா முத்தை
வாளா தொழும்புகந்து
கடைபட் டேனை ஆண்டுகொண்ட
கருணாலயனைக் கருமால்பிரமன்
தடைபட் டின்னுஞ் சாரமாட்டாத்
தன்னைத் தந்த என்னாரமுதைப்
புடைபட் டிருப்ப தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

**உரை:**—ஒளிர்கின்ற பொன் மலையைப்போல்வானை, தொளைக்கப்படாத முத்தினை யொப்பானை, மிகவுங்கீழ்மைப்பட்டேனாகிய என்னை யாட்கொண்டு பயனில்லாத என்தொண்டை ஏற்றுக்கொண்ட அருட்கோயிலானவனை, கரிய நிறமுடைய திருமாலும் நான் முகனும் செருக்கினால் தடைபட்டு இன்னுஞ் சென்றடைய முடியாத என்னுடைய கிடைத்தற்கரிய அருமருந்தை, பொள்ளலில்லாத என் மாணிக்கத்தைச் சேர்ந்து பக்கத்திற் பொருந்தியிருப்பது எந்நாளோ.

**குறிப்பு:**—மாற்றம் யாதுமில்லாத பயனைத் தருவதால் 'பொன் குன்ற'மென்றார். குறைவு யாதுமில்லாதது என்பார் 'தோளா முத்து' என்றார். வாளா=பயனின்றி. உரிச் சொல்லாகக் கொண்டு பயனற்ற என்றும் சொல்லலாம். கருணை+ஆலயன்=கருணாலயன். புடை=பக்கம். பட்டு=பொருந்தி. 'பொள்ளா' என்றது 'பொல்லா' என்றாயிற்று. பொள்ளாத=உளி முதலியவற்றால் செதுக்கப்படாத. இறைவன் தனக்கு உரியவனானதுபற்றி 'என் பொல்லாமணி' யென்றார். ௧



ஆற்ற கில்லேன் அடியேன் அரசே
அவனி தலத்(து)ஐம் புலனாய
சேற்றி லழுந்தாச் சிந்தை செய்து
சிவனெம் பெருமா னென்றேத்தி
ஊற்று மணற்போல் நெக்குநெக்
குள்ளே உருகி ஓலமிட்டுப்
போற்றி நிற்ப தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

**உரை:**— மன்னனே! அடியே னிவ்வுலக வாழ்க்கையைப் பொறுக்கமாட்டேன். பூதலத்திலே ஐம்பொறிகளுக்கும் விடயமாகிய சேற்றின் கண்ணே ஆழ்ந்துவிடாதபடி சிவனடியைச் சிந்தித்து எமது தலைவனே என்று வாழ்த்தி மணலின்கண் சுரக்கின்ற ஊற்று நீர் போல, நெகிழ்ந்து நெகிழ்ந்து உள்ளத்தை உருக்கங்கொண்டு கூவியழைத்துப் பொள்ளலில்லா வென் மாணிக்கம் போல்வானாகிய உன்னைச் சேர்ந்து வணங்கி நிற்பது எந்த நாளோ.

**குறிப்பு:**—'அவனிதலத்து ஐம்புலன் ஆற்றுகிலேன்' என்றலுமுண்டு. புலன்=பொறி ஏற்கும் பொருள். அதன்கண் அகப்பட்டால் எழுந்து விலகுவது கடினமாதலின் 'சேற்றி'லென்றார். ஊற்று மணலென்பதை மணல் ஊற்று என மாறுக. நெக்கு=நெகிழ்ந்து. ஓலம்=அடைக்கல ஒலி. ௨

நீண்ட மாலும் அயனும் வெருவ
நீண்ட நெருப்பை விருப்பிலேனை
ஆண்டு கொண்ட என்ஆ ரமுதை
அள்ளூ றுள்ளத் தடியார்முன்
வேண்டுந் தனையும் வாய்விட் டலறி
விரையார் மலர் தூவிப்
பூண்டு கிடப்ப தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

**உரை:**—(வாமனாவதாரத்தில்)உலகை யளத்தற்பொருட்டு நெடிய திருவுருக்கொண்ட திருமாலும், பிரமனும், அஞ்சும்படியாக உயர்ந்த

அனற்பிழம்பானவனே, தன் பால் விருப்பமில்லாத வென்னை யாட் கொண்டருளிய, கிடைத்தற்கரிய என தருமருந்தை, பொள்ளலில் லாத என் மாணிக்கம்போல்வானை யடைந்து மிகுதியும் இன்பம் ஊறுகின்ற அன்பர் முன்னே வேண்டியனவெல்லாம் வாய்விட்டரற்றி வாசனை பொருந்திய பூக்களைத் தூவி வணங்கித் திருவடியைச் சிரமேற் பூண்டுகொண்டு செயலற்றிருப்ப தெந்நாளோ.

**குறிப்பு** :—அள்ளூறும்=மிகுதியாக ஊறும். எலும்பும் உருக என்றுரைத்தலு முண்டு. சீவ உபாதி ஒழியும்வரை துதிப்பதையே 'வேண்டுந்தனையும் வாய்விட்டலறி' என்றார். 'பூண்டு' என்பதற்கு அடிமைத்திறம் பூண்டு, திருவடியைப் பொருந்தி என்று முரைப்ப.

அல்லிக் கமலத் தயனும் மாலும்
அல்லா தவரும் அமரர் கோனுஞ்
சொல்லிப் பரவும் நாமத்தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

**உரை** :—அழகிய உள்ளிதழ்களை யுடைய தாமரையில் வீற்றிருக்கும் பிரமனும், திருமாலும், விண்ணவர்க்கரசனாகிய இந்திரனும் பிறரும் புகழ்ந்து துதிக்கின்ற திருப்பேருடையானை, சொல்லுலகத்தையும், பொருளுலகத்தையுங் கடந்த வொளியானவனை, நெல்லிப் பழத்தையும் தேனையும் பாலையும், பூரண நயம் அமைந்த அமுதத்தையும், அமுதத்தின் சுவையையும்போலத் தித்திப்பவனை, பொள்ளலில்லாத மாணிக்கம்போல்வானை இறுகப்பற்றி அத்துவிதமாய்க் கலந்து நிற்பதெந்நாளோ.

**குறிப்பு** :—அல்லி=அகவிதழ், சொல்லும் பொருளும் மாயா காரியமாதலால், அவற்றைக் 'கடந்த' என்றார். சரியை, கிரியை, யோகம், ஞானயோகம், ஞானத்தின் ஞானம் என்னும் நிலையில் நிற்பவர்க்கு இறைவன் இன்பந் தருமுறையை நெல்லிக் கனி முதலிய உவமைகளாற் குறிப்பித்தார் என்னலாம்.



திகழத் திகழும் அடியும் முடியுங்
காண்பான் கீழ்மேல் அயனும் மாலும்
அகழப் பறந்துங் காண மாட்டா
அம்மான் இம்மா நிலம்முழுதும்
நிகழப் பணிகொண் டென்னை ஆட்கொண்
டாவா என்ற நீர்மை எல்லாம்
புகழப் பெறுவ தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

**உரை** :—செல்லச் செல்ல மிக்கு விளங்கும் அடியையும் முடியையுங் காணும்பொருட்டு மேலே பிரமனுங் கீழே திருமாலும் உயரப் பறந்தும், மிக ஆழ்ந்துங் காணமுடியாத அப்பெரியோன் இப்பெரிய நில உலக முழுவதுஞ் செய்தி தெரியுமாறு என்னை ஏவல்கொண்டு ஆண்டருளி,ஐயோ என்றிரங்கியதன்மையனைத்தும் பொள்ளலில்லாத மாணிக்கம்போல்வானையடைந்து புகழ்ந்து பேசக்கிடைப்பது எந்நாளோ ?

**குறிப்பு** :—திகழத் திகழும்=மிகுதியாக விளங்கும். கீழ் மேலயனும் மாலும் என்றது எதிர்நிரல் நிறை. கீழ்மாலும் மேலயனும் எனக் கொள்க. அகழ்ந்து என்பது, அகழ என நின்றது. அம்மான்=அப் பெரியோன். நிகழ=செய்தி பரவ.

பரிந்து வந்து பரமா னந்தம்
பண்டே அடியேற் கருள்செய்யப்
பிரிந்து போந்து பெருமா நிலத்தில்
அருமா லுற்றேன் என்றென்று
சொரிந்த கண்ணீர் சொரிய உள்நீர்
உரோமஞ் சிலிர்ப்ப உகந்தன்பாய்ப்
புரிந்து நிற்ப தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

**உரை** :—இறைவன் இரங்கிக் குருவாய் வந்து பேரானந்தத்தை முன்னமே அடியேனுக் கருள்செய்யவும் அவனைப் பிரிந்து பெரிய

நிலவுலகத்தில் தங்கிக்கடத்தற்கரிய மயக்கமுற்றேனே யென்றெண்ணி யெண்ணி சிந்திய கண்ணீரோடு உள்ளம் உருகி நீர்பொழிய மயிர்க் கூச்செரிய மகிழ்ந்து அன்போடு பொள்ளலில்லாத மாணிக்கம் போல் வானைச் சேர்ந்து காதலித்து நிற்ப தெந்நாளோ ?

**குறிப்பு :**—பெருமாநிலத்து என்பதில் மா என்பது அசை. 'சொரிய உள்நீர்' என்பதற்கு உயிரின் தன்மைகள் நீங்க என்றும் பொருள் கொள்ப. புரிந்து=விரும்பி. ௬

நினையப் பிறருக் கரிய நெருப்பை
நீரைக் காலை நிலனை விசும்பைத்
தனையொப் பாரை யில்லாத் தனியை
நோக்கித் தழைத்துத் தழுத்த கண்டங்
கனையக் கண்ணீர் அருவிபாயக்
கையுங் கூப்பிக் கடிமலராற்
புனையப் பெறுவ தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

**உரை :**—அன்பரல்லாத ஏனையோருக்கு நினைவதற்கரிய வான், காற்று, நெருப்பு, நீர், நிலம் என்னும் ஐந்து மானவனை, தனக்கு நிக ரானவர் யாருமில்லாத ஒரு பொருளைப் பார்த்து உடல் பூரித்துத் தழு தழுத்த தொண்டை ஒலிசெய்ய, கண்ணீர் அருவியாகப் பாய, கையி னால் அஞ்சலிசெய்து பொள்ள வில்லாத மாணிக்கம் போல்வானை யடைந்து அவனை நறும்பூவினால் அணிசெய்யக் கிடப்ப தெந் நாளோ ?

**குறிப்பு :**—செய்யுள்பற்றி ஐம்பூதங்களை முறையாக வைக்க வில்லை. அன்பின் மெய்ப்பாட்டினால் தொண்டை தழுதழுத்து நாத் தடுமாறிக் கனைப்பதுபோல ஒலியெழுவதால் 'தழுத்தகண்டம்கனைய' என்றார். ௭

நெக்கு நெக்குள் உருகி உருகி
நின்றும் இருந்துங் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதுந் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தாற் கூத்தும் நவிற்றிச்



செக்கர் போலுந் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர்சிலிர்த்துப்
புக்கு நிற்ப தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

**உரை:**—உள்ளங் குழைந்து குழைந்து இடைவிடாது உருகி, நின்றாலும் இருந்தாலுங் கிடந்தாலு மெழுந்தாலும் சிரித்தாலும் அழு தாலும், இடைவிடாது வணங்கி அவனை வாழ்த்திப் பற்பல வகையான ஆனந்தக் கூத்துகளுமியற்றிச் செவ்வானம் போன்ற அவன் திரு மேனியை விளங்கப் பார்த்து உடல் புளகங்கொண்டு பொள்ளலில் லாத மாணிக்கம்போல்வானை யடைந்து அவனிடைப் புகுந்து அத்து விதமாய்க் கலந்து நிற்பது எந்த நாளோ ?

**குறிப்பு:**—எச்செயல் செய்தாலும் இறைவனை வாழ்த்தவேண்டு மென்பார் 'நின்றுமிருந்தும்......வாழ்த்தி' என்றார். நவிற்றியென்பது கற்று என்றும் சொல்லி என்றும் பொருள்படினும் ஈண்டுக் கூத்தி யற்றுதலைக் குறித்து நின்றது. மயிர் சிலிர்த்தல் வியப்பினாலாவது. புக்கு நிற்பதென்றது, இறைவியாபகத்துள் அடங்கி நிற்றலை. ௮

தாதாய் மூவே ழுலகுக்குந்
தாயே நாயேன் தனையாண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே
பெருந்தேன் பில்க எப்போதும்
ஏதா மணியே என்றென் றேத்தி
இரவும் பகலும் எழிலார் பாதப்
போதாய்ந் தணைவ தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

**உரைநடை:**—பெருந்தேன் பில்க என்பதை அணைவது என்பத னோடு முடிக்க.

**உரை:**—பழமையாகிய எழுலகங்களுக்கும் தந்தையானவனே, தாயானவனே, நாயனைய என்னை யாட்கொண்ட அறிவுக்குறையுடை யவனே, பிறவி நோய்க்கு ஒப்பற்ற மருந்தே, எக்காலத்திலும் எவ் விதப் பயனுமாகின்ற மாணிக்கமே என்று இரவும், பகலும் இடை விடாது வாழ்த்திப் பொள்ளலில்லாத [illegible] யடைந்து

187094

அழகு நிறைந்த அவனுடைய திருப்பாத மலரைச் சிவானந்தம் பெருகும்படி அறிவினுலாராய்ந்து சார்வது எந்த நாளோ ?

**குறிப்பு:**—மூ=மூத்த; பழமையான. மூன்றிடத்துமுள்ள ஏழுலகங்கள் என்று பொருள் கொண்டால், ஈரிடத்தே ஏழுலகங் கூறு மரபிற்கு மாறுகும். 'ஏழு' என்பதை'எழு' என்பதன் நீட்சியாகக்கொண்டு மேல் கீழ்நடுவென்னு மூவிடத்தும் எழும் மூவகையான உலகங்கள் யாவற்றிற்கும் என்று பொருள் கொள்ளலாம். 'பேதாய்' என்றது பக்குவமடைவதற்கு முன்னே தன்னை யாண்டமையால். அது இகழ்ச்சி போற் புகழ்ச்சி. 'பெருந்தேன்' என்பது சிவானந்தத்துக்கு அறிகுறி. பில்க=சிந்த. ஏதாமணியே என்பதை மேதாமணியே எனக்கொண்டு அறிவுவடிவாகிய ரத்தினமே என்று முரைப்பர். மேதா=அறிவு. கூ

காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதுங்
கண்ணார் விசும்பின் விண்ணோர்க்கெல்லாம்
மூப்பாய் மூவா முதலாய் நின்ற
முதல்வா முன்னே எனையாண்ட
பார்ப்பா னேஎம் பரமாஎன்று
பாடிப் பாடிப் பணிந்துபாதப்
பூப்போ தணைவ தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

**உரை:**—எல்லாவற்றையும் படைப்பவனும், காப்பவனும், ஒடுக்குபவனுமானவனே, இடம் நிறைந்த வானின்கணுள்ள தேவர்களுக்கெல்லாம் முற்பட்டமையால், மூத்தவனுயிருப்பவனே, ஆனல் முதிர்ச்சியெய்தாத ஆதியாய் நின்றதத்துவனே, முன்னாளிலேயென்னையாட்கொண்ட அந்தணனே,பொள்ளலில்லாத மாணிக்கமாகியஉன்னையடைந்து எமது மேலோனே யென்று இடைவிடாது பாடிப்பொலிவுடைய உனது பாதமலரைச் சார்வது எந்த நாளோ.

**குறிப்பு :**—முழுதுங் காப்பாய், படைப்பாய், காப்பாயென வரிசைப்படுத்துக. கண்=இடம், பெருமை. அந்தணவடிவொடு ஆண்டமையாற் 'பார்ப்பானே' என்ருர். பூப்போது=பொலிவுடைய மலர், அழகிய மலர். கO

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

# வாழாப்பத்து

## முத்தி உபாயம்

### எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

**பா**ரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானல்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

**உரை :**—மண்ணுமாய் விண்ணுமாய் எங்கும் வியாபித்த எமது மேலோனே! நான் வேறு ஆதரவில்லாதவன் என்பதைக் கண்டருள்க. சிவலோக மன்னனே, (அங்கு) சிறப்பாய் விளங்குபவனே, திருப்பெருந்துறையில் வீற்றிருக்குஞ் சிவபெருமானே, என்னையாட்கொண்ட நீ வீட்டின்பத்தை நல்கி யருளவில்லை யானல் உன்னைத் தவிர நான் யாரோடு நொந்து கொள்வேன் ? வேறு யாரிடம் இக்குறையை எடுத்துப் பேசுவேன்? நெடிய கடல் சூழ்ந்த இவ்வுலகில் வாழ்ந்திருக்க இயலாத என்னை உன்பால் வருகவென்று அருள்செய்வாயாக.

**குறிப்பு :**—மண்ணும் விண்ணுங் கூறவே எங்கும் வியாபகமானமை கூறியவாருயிற்று. பற்று=ஆதரவு. 'சிவபுரத்தரசே சீரொடு பொலிவா' யெனமாறுக. 'ஆண்ட நீ யருளிலையானு' லென்பதை 'ஆரொடு நோகேன்' என்பதன் முன்வைக்க. 'கண்டாய்' அசை. க

வம்பனேன் தன்னை ஆண்டமா மணியே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
உம்பரும் அறியா ஒருவனே இருவர்க்
குணர்விறந் துலகமூ டுருவுஞ்
செம்பெரு மானே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எம்பெரு மானே என்னையாள் வானே
என்னைநீ கூவிக்கொண் டருளே.

**உரை :**—வீணாகிய என்னையாட் கொண்ட பெருமை பொருந்திய இரத்தினம்போல்வானே, நான் வேறு ஆதரவில்லாதவன், தேவர்களும் அறிய முடியாத ஒப்பற்றவனே, அயன் மால் என்னு மிருவருடைய அறிவினைக் கடந்து உலகங்களை ஊடுருவிச் சென்ற சிவந்த திருமேனி உடைய பெருமானே, சிவலோக மன்னனே, திருப்பெருந்துறையில் தங்கும் சிவபெருமானே, எமது தலைவனே, என்னை யாட்கொண்டவனே, என்னை நீ விரைவில் உன்பால் அழைத்துக் கொள்க.

**குறிப்பு :**—வம்பு=பயனின்மை. இருவர்க்கு=இருவருடைய. உம்பர்=வானவர். ௨

பாடிமால் புகழும் பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீ ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஊடுவ துன்னோ டுவப்பதும் உன்னை
உணர்த்துவ துனக்கெனக் குறுதி
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

**உரை :**—திருமால் பாடித் துதிக்கும் உன்னுடைய திருவடிகளையல்லாமல் வேறு ஆதரவு உடையேன் அல்லேன், சிவலோக மன்னனே! நீயாகவே என்னைத்தேடி வந்தாட்கொண்டாய். திருப்பெருந்துறையிலெழுந்தருளிய சிவபெருமானே, பிணங்குவதும் உன்னோடுதான். மகிழ்வதும் உன்னைக் கண்டே. எனக்கு உறுதியறிவிப்பது உனக்குரியதே. வாட்டமடைந்தேனாகிய நான் இந்த உலகிலே வாழமாட்டேன். உன்பால் வருக வென்று அருள் செய்வாயாக.



**குறிப்பு :**—'பாடி மால்' என்பது 'மால் பாடி' என மாறுக. எனக்குறுதி யுணர்த்துவது உனக்கு எனக் கொள்க. ௩

வல்லைவா ளரக்கர் புரமெரித் தானே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
தில்லைவாழ் கூத்தா சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எல்லைமூ வுலகும் உருவியன் றிருவர்
காணும்நாள் ஆதியீ றின்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

**உரை :**—விரைவிலே வாளினையுடைய அசுரர்களது திரிபுரத்தை எரித்தவனே, நான் வேறு ஆதரவில்லாதவன். தில்லைப்பதியில் வாழ்கின்ற கூத்தப்பெருமானே, சிவலோக மன்னனே, திருப்பெருந்துறையிற்றங்கி யருளிய சிவபெருமானே, பண்டைக்காலத்து அயனு மாலுமாகிய இருவர் உன்னைக் காண முயன்ற நாளிலே மேல், கீழ் நடுவென்ற எல்லையுடைய உலகங்களை ஊடுருவி முதலும் முடிவுந் தோன்றாமை செய்யும் வலிமையுடையவனாய் வளர்ந்தவனே, நானிவ்வுலகில் வாழமாட்டேன். உன்பால் வருக வென்றருள் செய்வாயாக.

**குறிப்பு :**—வல்லை=விரைவில். அரக்கரும் அசுரரும் வேறாயினும் இருசொல்லும் பரியாய நாமங்களாய் வருதல் காண்க. அன்று=பண்டைக்காலம். 'அன்று இருவர் காணு நாள் எல்லை மூவுலகுமுருவி ஆதியீறின்மை வல்லையாய்' என முடிக்க. வல்லையாய்=வலிமையுடையாயாய். ௪

பண்ணினேர் மொழியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

**உரை :**—பண்ணை யொத்த சொல்லையுடைய உமை யம்மை பாகனே! நான், உன்னை யல்லாது வேறு ஆதரவில்லாதவன். உறுதி யாக என்னை யாட்கொண்டவனே, சிவலோகப் பெருமானே, திருப் பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமானே, அறிவுக் கருவி யாகிய மனத்தையும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம் பொறிகளையும் நின்னிடத்தே வைத்து விட்டுப் பின் இம்மண்ணுல கில் அடியேன் வாழமாட்டேன். என்னை உன்பால் வருகவென்றருள் செய்க.

**குறிப்பு :**—பண்ணின் நேர் எனவும், பண்ணின் ஏர் எனவும் பிரிக்காலம். பின்னதிற்கு, பண்ணைப்போல அழகிய என்று பொருள். தமது மனமும், ஐம்பொறிகளும் இறைவனை நாடினமை இதன்கட் குறித்தார். ௫

பஞ்சின்மெல் லடியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அஞ்சினேன் நாயேன் ஆண்டுநீ அளித்த
அருளினை மருளினால் மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

**உரை:**—பஞ்சைப்போன்ற மென்மையான அடியை உடைய உமையம்மை பாகனே! நீ யல்லாமல் எனக்கு வேறு ஆதரவு இல்லை. மிகச் செவ்வையாகவே ஆட்கொண்டருளியவனே, சிவலோக மன்னனே, திருப்பெருந்துறையில் வீற்றிருக்குஞ் சிவபெருமானே, நீ நல்கின திருவருளினை மயக்கத்தால் மறந்த நாயேன் பயப்படலா யினேன். வஞ்சனையுடையேனாயினும் யானிவ்வுலகில் வாழமாட் டேன். வருகவென்றருள் செய்வாயாக.



**குறிப்பு :**—'பஞ்சின்' என்பதற்கு 'ஊட்டின செம்பஞ்சை யுடைய' எனவுங் கூறுப. செஞ்செவே = செம் + செவ்வே = மிகச் செவ்வையாக. நீ யளித்த அருளினை மருளினால் மறந்த நாயேன் அஞ்சினேன் வஞ்சனேன் என முடிக்க. ௬

பரிதிவாழ் ஒளியாய் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திருவுயர் கோலச் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்துளம் உருகிக்
கலந்துநான் வாழுமா றறியா
மருளனேன் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

**உரை:**—சூரிய மண்டலத்திலுள்ள ஒளியையுடையவனே, உன் திருவடியே யல்லாமல் வேறு ஆதரவில்லாதேன். சிறப்பு மிகுந்த அழகிய சிவலோக மன்னனே, திருப்பெருந் துறையி லெழுந்தருளிய சிவ பெருமானே, உலகப் பொருள் எதனையும் நோக்காது உன் திருவருளையே கருதி உள்ளங் கனிந்துருகி உன்னோடு கலப்புற்று வாழும் விதத்தை யறியாத மயக்கமுடையேன் (ஆயினும்) இவ் வுலகிலே நான் வாழமாட்டேன். உன்பால் வருகவென்று அருள் செய்வாயாக.

**குறிப்பு:**—இறைவன் செம்மேனியனாதலின் சூரியமண்டலத்தி னொளிக்கு அவன் மேனி யொளியை உவமித்தார். திரு = வீடளிக் குஞ் சிறப்பு. ௭

பந்தணை விரலாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அந்தமில் அமுதே அரும்பெரும் பொருளே
ஆரமு தேஅடி யேனை
வந்து(ய்)ய ஆண்டாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

**உரை:**—பந்தின் உருட்சித் தன்மை வாய்ந்த விரலையுடைய உமையம்மை பாகனே, நீ யல்லாமல் வேறு ஆதரவு இல்லாதேன். செவ்விய அனல்போன்ற திருமேனியுடையவனே, சிவலோக மன்னனே, திருப்பெருந்துறையிற்றங்கிய சிவபெருமானே, முடிவில்லாத நித்தியனே, பெறுதற்கரிய பெரிய பொருளே, கிடைத்தற்கரிய சாவா மருந்தே, அடியேன் உய்தி கூடும்படி குருவாய் வந்து ஆட்கொண்டவனே, இவ்வுலகில் வாழமாட்டேன். வருகவென் றருள்செய்க.

**குறிப்பு:**—'பந்தணை' என்பதற்குப் பந்து சேர்ந்த என உரைப் பாருமுளர். 'அந்தமிலமுதே' என்பதில் அமுதென்பது மரணத்தைக் கடந்தவன் என்ற பொருளுடைத்து. 'உயவந்து அடியேனை ஆண்டாய்' என முடிக்க. ௮

பாவநா சாவுன் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
மூவுல குருவ இருவர்கீழ் மேலாய்
முழங்கழ லாய்நிமிர்ந் தானே
மாவுரி யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

**உரை:**—தீவினையை அழிப்பவனே, உனது திருவடி யன்றி வேறு ஆதரவு இல்லாதேன். விண்ணவர்க்குத் தலைவனே, சிவலோக



இன்னமும் இந்த நிலைக்குக் குற்றம் வாராதபடி வேறுமோர் உபாயம் அருளிச் செய்கின்றார்:

உணராதே யாதும் உறங்காதே உன்னிப்
புணராதே நீபொதுவே நிற்கில்—உணர்வரிய
காலங்கள் செல்லாத காலத் துடனிருத்தி
காலங்கள் மூன்றினையும் கண்டு.

**(உரை)** நீ யாதும் உணராதே உறங்காதே உன்னிப்புணராதே பொதுவே நிற்கில் - நீ பொருளல்லவென்று அறிந்து நீங்கின தேகாதிப் பிரபஞ்சங்களிலே, வாசனை மிகுதியினாலே கூடி நின்று விகற்பியாதை! இந்த விகற்பங்கள் நீங்கின அவசரங்களிலுண்டான மயக்கங்களில் அழுந்தாதை! சுகசொரூபத்தை உன் போதத்தால் அறிந்து கூட விசாரியாதை! இந்தக் குற்றங்கள் நீங்கும்படி உனக்குக் கண்ணுமாய் உனக்கு நடுவே நிற்கின்ற ஞானத்திற் கூடி அந்த ஞானந் தானாகவே நிற்கின்,—உணர்வரிய காலங்கள் செல்லாத காலத்துடன் காலங்கள் மூன்றினையும் கண்டு இருத்தி - யாவராலுங் குறித்தற்கரிய செல்காலம் வருங்காலம் நிகழ்காலமென்று சொல்லப்பட்ட மூன்று காலங்களினும் படாமல் இந்தக் காலங்களாலே விசுவத்தை நடாத்தின் கால சொரூபமாயிருக்கின்ற சிவத்துடனே, நீயும் அக்காலங்கள் மூன்றையும் வேறாகக் கண்டு, அச் சிவமேயாய் அழிவின்றியே இருப்பாய். ௩௧

இந்த அர்த்தத்தி னுண்மையும் இந்த அர்த்தத்தைப் பெறத் தக்கவர்க ளுண்மையும் விளங்க அருளிச்செய்கின்றார்:

அறிவறிவாய் நிற்கில் அறிவுபல வாமென்(று)
அறிவின் அறிவவிழ்த்துக் கொண்டவ்—அறிவினராய்
வாழ்ந்திருப்பார் நீத்தவர்கண் மாணுடரின் மாணவகா
தாழ்ந்தமணி நாவேபோல் தான்.

**(உரை)** மாணவகனே! ஆன்மா தன்னுடைய போதத்தையே பொருளாகக்கொண்டு நிற்கின், விகற்பிக்கிறதே சுபாவமாய போதமும் பலவாய்ச் சிந்திவிடுமென்று இதனை ஆசாரியன் அநுக்கிரகத்தாலே அறிந்து, தனக்கு அநாதியே பிராணனாய் நிற்கின்ற ஞானத்தைக்கூடி, தன்னுடைய ஆன்ம சுபாவத்தையு மொழிந்து, அந்த

ஞானமேயாய், அந்த ஞானத்தின் ஐக்கியத்தாலே தனக்கு இன்றளவுங் கிடையாத பெரு வாழ்வாகிய பரமானந்த சொரூப சிவனைப் பெற்றுத், தானும் அந்தப் பரமானந்தமேயா யிராநிற்பன். இவ்வாழ்வைப் பெறவுரியார் யாரென்னில்? மானுடப் பிறப்பினுள்ளாரில் தேகாதிப் பிரபஞ்சங்களிலுள்ள ஆரவாரங்களைக் கைவிட்டு, நிலத்திலே வைத்த மணியினது நாவேபோலச் சலிப்பற்றிருக்கின்ற சீமான்கள். ௩௨

இந்த நிராதார யோகத்திலே நிகழ்வதொரு குறியுண்டென்றும் இது நிகழ்ந்தாற் செய்யுமுபாயமும் அருளிச்செய்கின்றார்:

ஓசையெலாம் அற்றால் ஒலிக்குந் திருச்சிலம்பின்
ஓசை வழியேசென் றொத்தொடுங்கில்—ஓசையினின்
அந்தத்தான் அத்தான் அரிவையுடன் அம்பலத்தே
வந்தொத்தான் அத்தான் மகிழ்ந்து.

**(உரை)** இந்த நிராதார யோகத்தைச் செய்கின்ற சிவயோகிகள், சிவனைப் பெறுகைப் பொருட்டுத் தேகேந்திரிய அந்தக்கரணங்களாயுள்ள ஆரவாரங்கள் ஒடுங்கும்படி, ஞானத்தினாலே தம்முடைய இச்சாஞானக்கிரியைகளை ஒழித்த அவசரத்திலே, ஆனந்த நிருத்தம் பண்ணி யருளாநின்ற தம்பிரானார் ஸ்ரீபாதத்தில், பரவிந்துவென்கின்ற திருச்சிலம்பிற் பரநாதமென்கின்ற ஓசை தோன்றா நிற்கும். அந்த ஓசை வழியே நாடிச் சென்று கூடி, அந்த ஓசை முடிந்தவிடத்தே, தன்னுடைய போதமும் ஒக்கமுடியில், அப்பொழுதே அந்த ஓசை முடிந்த விடமே இடமாகவுடைய தம்பிரானார் காருண்ணிய சத்தியுடனே அம்பலமாகிய ஞானப் பிரகாசத்திலே வந்து இவனைப் பிரியத்துடனே கூடுவார். ௩௩

இனித் தாம் அருளிச்செய்த நிராதார யோகத்தின் உண்மையைத் தம்மை யொழியப் பிறரும் விளங்க அருளிச்செய்தபடி விளங்க அருளிச் செய்கின்றார்:

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமுமாம்—சார்பு
கெடவொழுகில் நல்ல சமாதியுமாம் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று.

**(உரை)** தெய்வப் புலமைத் திருவள்ளுவதேவ நாயனாரும் "சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின்" என்றமையால், தனக்கு



அநாதியே தாரகமாய் நிற்கின்ற திருவடி ஞானத்தை அது கண்ணாக அறிந்து அதனுடனே இரண்டறக்கூடி நிற்கில், மீண்டும் ஒரு ஜநநமுண்டாகைக்குக் கன்மம் உண்டாகாதென்று அருளிச்செய்த பிரமாணப்படியே, தனக்குத் தரிசனமான ஞானத்தைக்கூடி அசைவற நிற்கின், அதுவே சிவத் தியானமாம். அந்த நிலையில் தியானிக்கின்றோமென்கிற பாவனை குலையின், அப்பொழுதே சுக சொரூபமான சிவனைக்கூடி நன்றான சமாதிபரனாகா நிற்பன், இப்படிக் கூடின சிவயோகிகளுக்குப் பின்பு ஜநநத்தை உண்டாக்குகின்ற ஆகாமிய கன்மம் உண்டாகாது. ௩௪

ஞானத்தினாலே சிவனைக் கூடவேண்டுமென்று சிரத்தை பண்ணுவாரை அந்தச் சிவமானதும் அவதி கூடாமல் வந்து கூடு முறைமையை அருளிச் செய்கின்றார்:

அன்றிவரும் ஐம்புலனும் நீயும் அசையாதே
நின்றபடி யேநிற்க முன்னிற்கும்—சென்று
கருதுவதன் முன்னம் கருத்தழியப் பாயும்
ஒருமகள்தன் கேள்வன் உனக்கு.

**(உரை)** அநாதியே உன்னை மாறுபடுத்தி வருகின்ற விஷயங்களிலே கூடிநின்று நீ சலியாதே, அவற்றை வேறாகக் கண்டு நீங்கின உனக்குப் பிராணனாய் நிற்கின்ற ஞானமானது உன்னுடனே இரண்டற நிற்கும் முறைமைபோல, நீயும் அதனைத் தரிசித்து அந்த ஞானமாகவே இரண்டற நிற்கில், அப்பொழுதே இந்த ஞானத்துக்கு முதலாகிய ஞேய சொரூபமாகிய சிவம் தோன்றா நிற்கும். இப்படித் தரிசனமான சிவனைக் கூடவேண்டுமென்று சிரத்தை பண்ணுமளவில், அதற்கு முன்னே உன்னுடைய கருத்தையும் அழித்துத் தன்னுடனே ஒரு நீர்மையாக்கிக்கொள்ளா நிற்பன்; ஒப்பில்லாத சத்திக்கு நாயகனான சிவன். ௩௫

ஆனால், ஆன்மாவாலே சிவனை நினைத்துக் கூடலாமோ என்னின், சிவன் ஆன்மாவால் அறியப்பட்ட பொருளன்றென்று அருளிச் செய்கின்றார்:

உண்டெனில் உண்டாகும் இல்லாமை இல்லையெனில்
உண்டாகும் ஆனமையின் ஓரிரண்டாம்—உண்டில்லை

என்னு மிவைதவிர்ந்த இன்பத்தை எய்தும்வகை
உன்னில்அவன் உன்னுடனே யாம்.

(உரை) உண்டெனில் இல்லாமை உண்டாகும் (இல்லாமை) உண்டாகும் உண்டென்னில் உண்டாவதில்லையென்றும். இல்லையென்னில் உண்டாவதில்லையென்றும். எங்ஙனமென்னில், சிவனை ஆன்மபோதத்தால் அறிந்து கூடலாமென்னின், ஆன்மபோதத்தால் அறிந்து கூடத்தக்க பொருளாவது, இந்திரசாலம் போன்ற பிரபஞ்ச மாகையாலுஞ், சிவன் வாக்குமனாதீதன் ஆகையாலும், இப்படிச் சொல்லுமவனிடத்தில் உண்டாம் பொருளாவது, சிவனைத் தெரியாததொன்றுமே. சிவன் ஆன்மாவால் அறியப்படாத பொருளென்னின், அவனிடத்திலும் உண்டானது சிவனைத் தெரியாததொன்றுமே,—ஆனமையின் ஓர் இரண்டாம் - ஆனபடியினாலே இப்படிச் சிவனைத் தெரியாதிருப்ப தொருமுறைமை இரண்டு பிரகாரமாயிருக்கும்,—உண்டு இல்லையென்னும் இவை தவிர்ந்த இன்பத்தை எய்தும் வகை உன்னில் அவன் உன்னுடனே ஆம் - இந்தப் பாவ அபாவமென்கின்ற இரண்டு வழியாலுஞ் சிவனைக் கூடவொண்ணாதென்று அறிந்து, இவற்றைவிட்டுத் தானாகவே நிற்கின்ற ஞானமாயே நின்று, அளவிலாத பேரின்பத்தைப் பெறும்படி சிவனிடத்திலே அன்பை வைக்கில், அப்பொழுதே ஒன்றாலும் பாவிக்கப்படாத சிவன் தன்னுடைய காருண்ணியத்தினாலே உன்னை இரண்டறக் கூடி நிற்பன். நிராதாரயோகம் முற்றியது. ௩௬

இந்த நிராதார யோகத்திலே மிகவும் வாசனை யுண்டவர்களுக்கு ஒவ்வொரு பக்குவங்களிலே கூடாமை கூடினால் என் செய்யலாமென்ற மாணாக்கனை நோக்கி, சிவ ஞானமாகிய தத்துவ ஞானம் இருக்கும்படியை அருளிச் செய்கின்றார் :

தூல உடம்பாய முப்பத்தோர் தத்துவமும்
மூல உடம்பாம் முதல்நான்கும்—மேலைச்
சிவமாம் பரிசினையுந் தேர்ந்துணர்ந்தார் சேர்ந்த
பாவமாம் பரிசறுப்பார் பார்.

(உரை) தூல வுடம்பாய முப்பத்தோர் தத்துவமும் - ஆன்மா கன்ம பலத்தைப் புசிக்கும் பொருட்டாக, அன்னமயத்தாற் பரிணமித்த சரீரத்திலே நின்று, இது பரிணமமாம்படி இந்த சரீரத்துக்குக் காரணமுமாய், ஆன்மாவிற்குத் தனுகரண புவன போகங்களுமாய் நிற்கின்ற ஆன்ம தத்துவம் இருபத்துநாலும், புசிக்கைக்குக் கால நியதிகளுமாய், இச்சா ஞானக் கிரியைகளைச் சீவிப்பிக்கைக்குக் கலை வித்தை அராகங்களுமாய், போகங்களிலே அழுத்துகைக்குப் பிரகிருதியுமாய், மயக்குகைக்கு மாயையுமாய் நிற்கின்ற வித்தியா தத்துவம் ஏழுமாகத் தூலவுடம்பிலே பொருந்தி நிற்கின்ற தத்துவம் முப்பத்தொன்றும்,—மூலவுடம்பாம் முதல் நான்கும் - இம்மாயா தத்துவங்களைப் பிரேரிக்கவுங், கன்மங்களுக்கீடாக ஞானக் கிரியைகளை நானாதிகமாகப் பிறப்பிக்கவும், வாக்குகளை எழுப்பவுங், காரணத்துக்குத் திருமேனியாகவும், பதப் பிராப்தங்கட்குப் பதங்களாகவுந் தோன்றி, உள்ளே மூலவுடம்பாய் நின்று நடத்துகின்ற விந்து சத்தி முதலான தத்துவம் நாலும்,—மேலைச் சிவம் - இத் தத்துவங்களுக்குக் காரணமுமாய் ஆன்மாவுக்குப் பிராணனுமாய் நிற்கின்ற சிவ தத்துவம் ஒன்றும்—,ஆம்பரிசினையும் தேர்ந்து உணர்ந்தார் சேர்ந்த பவமாம் பரிசு அறுப்பார் பார்-ஆகிய இந்தத் தத்துவ முப்பத்தாறும் ஆன்மா புசிக்கைக்குத் துணைக் காரணமாய்த் தூல சூக்குமபரமாய் நிற்கையால், இந்த முறைமையை ஆசாரியன் அருளாலே, உருவ தரிசன சுத்திகளுடனே பார்த்து நீங்கி, தன்னையும் ஞானத்தையும் சிவனையும் உணர்ந்த சிவஞானிகளே, அநாதியே பொருந்திப் போதுகின்ற ஜநந மரணங்களாகின்ற முறைமையைப் போக்கா நிற்கின்றவர்கள். ஆதலால், உனக்குத் திருசியமாகவும் விரோதமாகவும் பிராரத்தத்தாலே பிரபஞ்சந் தோன்றினதாயினும் இப்படிப் பார்த்துக் கூடுவாயாக. ௩௭

இப்படிப் பார்க்க அரிதானவர்களுக்கு வேறேயும் ஓர் உபாயம் அருளிச் செய்கின்றார் :

எத்தனையோ தத்துவங்கள் எவ்வெவர்கோட் பாடுடைய
அத்தனையும் சென்றங்கு அளவாதே—சித்தமெனும்
தூதுவனைப் போக்கிப்போய்த் தூக்கற்ற சோதிதனில்
பாதிதனைக் கும்பிடலாம் பார்.

(உரை) எத்தனையோ...அளவாதே - அநேகவிதமான தத்துவங்களையும் பல சமயிகள் கொண்டிருக்கத்தக்க கோட்பாடுகள் அடங்கலை

யுஞ் சென்றறியப்புக்கு, அவற்றிலே மொத்துண்டு அழியாதே,—சித்தமெனும்...பார் - உன்னை ஜநந மரணங்களிலே தள்ளுகைக்கு அநாதியே தூதனாகி விசுவத்திலே வாசனைப் படுத்திப் போதுகின்ற சித்த விகாரத்தை ஞானத்தாலே ஒழித்துச் சென்று, ஒப்பில்லாத அந்த ஞானத்தைக் கூடி, இந்த ஞான சத்தியை ஒரு பாதியாக வுடைய சிவனை மனவாக்குக் காயங்கள் கூடாதபடி, அவன் திருவடியிலே அழுந்தி நிற்கலாம். இதனை விசாரித்துப்பார். ௩௮

இந்த உண்மையிலே கூடுமளவில், உயிர்ச் சார்பு பொருட் சார்பிற் பற்றுவிட வேண்டுமென்று அருளிச் செய்கின்றார் :

சாம்பொழுதும் ஏதும் சலமில்லை செத்தாற்போல்
ஆம்பொழுதி லேஅடைய ஆசையறில்—சோம்புதற்குச்
சொல்லும் துணையாகும் சொல்லாத தூய்நெறிக்கட்
செல்லும் துணையாகும் சென்று.

**(உரை)** சாம்பொழுதும்...அறில் - இப்படிப்பட்ட சிவஞானிகளுக்குச் சரீரம் விடுவதாகிய சாக்காடு வந்தடுத்த காலத்தும், அந்தச் சிவரூபமாயே விடுவதொழிந்து சற்றுந் தத்துவங்களாலுள்ள அசைவு கூடாது. இதற்குக் காரணம் ஏதென்னில், தேக நிற்கின்ற பொழுதே தேக மில்லாதவர்களைப்போல் அநாதியே வாசனைப் பட்டுப் போதுகின்ற உயிர்ச் சார்பு பொருட் சார்புகளிற் பற்று அடங்கலும் விடுகையால்.—சோம்புதற்கு...சென்று - இப்படிச் சரீர நிற்கும்போதே உயிர்ச் சார்பு பொருட் சார்பில் பற்று அடங்கலும் விடுமாகில், இது தானே, பணியறுத்தலென்கின்ற நிலைக்குச் சொல்லப்பட்ட தொரு துணையாக நிற்கும்; இது வொழிந்து, வாக்கால் உரைக்கப்படாத சுத்த நெறியால் வீட்டின்பத்திலே பொருந்துகின்ற அவசரத்துக்குந் துணையாகா நிற்கும். ௩௯

இந்த அவாவறுத்தலும் அவனருளாலே வேண்டுமென்று அருளிச் செய்கின்றார் :

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டின்அஃ தொன்றுமே வேண்டுவது—வேண்டினது
வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டுமவன் பால்.



**(உரை)** வேண்டுங்கால்...வேண்டுவது-தெய்வப் புலமைத் திருவள்ளுவதேவ நாயனாரும் "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை' என்று அருளிச் செய்தமையாலே, தேகம் உள்ள அளவும் இவன் ஒன்றை விரும்பாதொழியினும் பிராரத்தத்தாலே யுள்ளது கூடுமாகையால், ஒன்றை விரும்ப வேண்டு மிடத்துப் பிறவாமை ஒன்றுமே விரும்ப வேண்டுவது,—அது வேண்டின் வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டும் அவன் பால் வேண்டாமை வேண்டிடுக - அந்தப் பிறவாமையை வேண்டின் தான் வேண்டாமை வேண்டவருமென்று பிரமாண முண்டாகையாலே, நாம் விரும்பத் தக்க கர்த்தாவின் பக்கலிலே, பிறவாமைக்கு உற்பத்தியான அவாவறுத்தல் ஒன்றுமே வேண்டிக் கொள்ளவேண்டுவது. இந்த அவாவறுத்தல் உண்டாகவே அந்தப் பிறவாமை தானே உண்டாம். ௪௦

இப்படி உயிர்ச் சார்பு பொருட் சார்பிற் பற்றற்றபோதே சமாதி பரனாகவும் அங்ஙனம் நிற்கும்போதே, சமாதி விசாரித்தவர்களுக்குச் சமாதி கூடாமல் நினைவு கூடி, இதனாலே ஜநநங்கள் கூடும் முறைமையை அருளிச் செய்கின்றார் :

அரண உணர்வு தனில் அவ்வுணர்வை மாற்றில்
கரணமும் காலும்கை கூடும்—புரணமது
கூடாமை யுங்கூடுங் கூடுதலுங் கூட்டினுக்கு
வாடாமை யுங்கூடும் வந்து.

**(உரை)** அரண...கைகூடும் - இந்திரிய வேடர் சென்று ஈடு கொள்ளப்படாத புகலிடமான திருவடி ஞானத்தினாலே தன்னுடைய போதத்தை ஒழிக்க விசாரிப்பானாகில், அந்த அவசரத்திலே, முன்பு தான் பற்றிப் போந்த உயிர்ச் சார்பு பொருட் சார்பின் வாசனையாலே, சொரூபமானது கைகூடாமல், மனாதிகளும் பிராணவாயுவுங் கூடி, மீண்டு விடயங்களிலே சலிப்பினுஞ் சலிக்கும்.—கூடாமை புரணமதும் கூடும் - இது கூடாமற் புரிந்து மயக்கம் வந்து கூடினும் கூடும். கூடுதலும் கூட்டினுக்கு வாடாமையும் வந்து கூடும் - இப்படி மயக்க விகற்பங்கள் கூடிப்போதரவே, எடுத்த தேகம் போனாலும், இந்தப் பற்றுக்களாலே மீண்டும் ஒரு தேகம் வந்து கூடாநிற்கும்; ஆதலால், இது கூடாதபடி உயிர்ச் சார்பு பொருட் சார்புகளில் பற்றுக்களை அற்றே சுக ரூபத்திலே பொருந்தி நிற்பாயாக. ௪௧

சமாதிபராயணவனுக்கும் பற்றுக்களாலே சமாதி கூடாமல் ஜநநங்கள் கூடுமாகில், சிவ தீக்ஷையும் தரிசனமு மில்லாத ஆன்மாக்கள், மரியாதையோ பெற்றுள்ள வென்று கேட்ட மாணாக்கனை நோக்கி அருளிச் செய்கின்றார் :

இன்றிங் கசேதனமாம் இவ்வினைக ளோரிரண்டும்
சென்று தொடருமவன் சென்றிடத்தே—என்றுந்தான்
தீதுறுவன் ஆனால் சிவபதிதான் கைவிடுமோ
மாதொருகூ றல்லனோ மற்று.

**(உரை)** இன்று...சென்றிடத்தே-இப்பொழுது இந்தத் தேகத்திலே நிற்கும்போதே கூடின அசேதனமான புண்ணிய பாவங்கள் இரண்டும் இவன் பின்னொரு தேகத்தை எடுத்த பொழுதே ஒக்கச் சென்று கூடாநிற்கும்,—தீது உறுவனானால் பதி சிவந்தான் கைவிடுமோ என்றுந்தான் மாது ஒரு கூறு அல்லனோ மற்று - ஒருவன் சிவதீக்ஷையும் சிவஞானமும் பெற்றுத் தெளிந்திருக்கும் போதேயும் முன்புபோல உயிர்ச் சார்பு பொருட் சார்புகளின் பற்றுவிடாமல் ஜநநங் கூடிற்றேனும், கர்த்தாவாகிய சிவனும் இவனைக் கைவிடாமல், முன்புண்டான மனம் பற்றுகைக்குத் தக்கவற்றைக் கூட்டித் தொலைப்பித்து, முன் ஜநநத்திலே சாதித்த குறையிலே வந்து எடுத்துக்கொண்டு நிட்டையிலே கூட்டிச் சாயுச்சியத்தைக் கொடாநிற்பன்; இவன் காருண்ணிய சத்தியினை எப்பொழுதுந் தன்னிடத்திலே உடையவனாதலால். ௪௨

இன்னமும், பெத்தமுத்திகள் இரண்டினும் ஆன்மாக்களைப் பாதுகாத்து ஈடேற்றுகை அநாதியே கர்த்தாவுக்குக் காரணமான முறைமை என்பது தோன்ற அருளிச் செய்கின்றார் :

அநாதி சிவனுடைமை யால்எவையும் ஆங்கே
அநாதியெனப் பெற்ற அணுவை—அநாதியே
ஆர்த்த துயரகல அம்பிகையோ(டு) எவ்விடத்தும்
காத்தல் அவன்கடனே காண்.

**(உரை)** அநாதி சிவன் எவையும் உடைமையால் - அநாதியான சிவனுக்கு எண்ணிறந்த ஆன்மாக்களும் அடிமையாகையாலே,—ஆங்கே அநாதியெனப்பெற்ற அணுவை அநாதியே ஆர்த்த துயர் அகல - இப்படி அநாதியான ஆன்மாக்களை அநாதியே பேதித்துக் கொண்டு நிற்கின்ற பாசமானது விட்டு நீங்கும்படி,—அம்பிகையோடு எவ்விடத்தும் காத்தல் அவன் கடனே காண் - விட்டு நீங்காத சத்தியுடனே பெத்தத்திலுங் கூடி நின்று தொலைப்பித்து, முத்தியினும் மீண்டும் ஒருடம்பு கூடாதபடி திருவடியிலே கூட்டிக் கொள்ளுகின்ற இது மாணவகனே! அவனுக்கு அநாதி முறைமையே காண். ௪௩



தேகாதிபாசம் அநாதியாகில், முத்தியிலும் போகாதேயென்று சந்தேகித்த மாணாக்கனை நோக்கி அருளிச் செய்கின்றார் :

தம்மிற் சிவலிங்கம் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன்பால் மஞ்சனநீர் தாமாட்டித்—தம்மையொரு
பூவாகப் பூவழியா மற்கொடுத்துப் பூசித்தால்
ஓவாமை யன்றே யுடல்.

**(உரை)** தம்மில் சிவலிங்கம் கண்டு - ஆசாரியனாலே, தனுகரண புவன போகங்களை விட்டு நீங்கி, தன்னைத் தரிசித்து, தன்னிடத்திலே தனக்குப் பிராணனுமாய்ச் சிவனுக்கு அடையாளமுமாய் நிற்கின்ற ஞானமாகிய சிவலிங்கத்தைத் தரிசித்து,—அதனைத் தாம் வணங்கி - அந்தச் சிவலிங்கத்தைத் தம்முடைய போதம் விட்டுப் போம்படி, சாந்தமாகிய வணக்கஞ் செய்து,—தம் அன்பான் மஞ்சன நீர்தாம் ஆட்டி - இப்படிப் பெறுதற்கரிய பேற்றைப் பெற்றோமென்கின்ற சிரத்தையாகிய சலத்தாலே, திருமஞ்சனம் பண்ணி,—தம்மை ஒரு பூவாக அழியாமல் பூக்கொடுத்து - இப்படிச் செய்கின்ற ஆன்ம சொரூபத்தை ஒப்பில்லாத் திருப்பள்ளித் தாமமாக மயங்காமல் அதனைச் சாத்தி,—பூசித்தால் - இப்படி ஞானத்திற் சரியை கிரியா யோகங்களினாலே உள்ளே சிவனைக்கண்டு ஐக்கியஞ் செய்கின்ற இது,—ஓவாமை அன்றே உடல் - செம்புருகின பதத்திலே கூடின குளிகையினது ஐக்கியத்தாலே அநாதியான காளிதமும் செம்பெனும் உருவமும் நீங்க மாற்றுப் பிரகாசித்து, பின்பு இவை என்றுங் கூடாதவாறுபோல, ஒருவன் தன்னுடைய சத்திநிபாதத்தாலே உண்டான அன்பின் மிகுதியாலே, தேகேந்திரியாதிகளை நீங்கின தன்னுடைய உண்மையான சொரூபத்தைத் தனக்கேற்பப் பெற்று, தன்னிடத்திலே சிவனைக் கண்டு ஐக்கியஞ் செய்து வாசனை விட்டால், பிராரத்த நாசம் பிறந்து தேகம் விட்டபொழுதே, திருவடியிலே

இரண்டற்று விடும தொழிந்து, மீண்டுந் தேகம் எடுக்க மாட்டா தன்றே. ௪௪

அநாதியான பாசம் விட்டு நீங்குமாகில் அநாதியென்று ஆன்மாவுக்கு வழியுண்டாமோ வென்ற மாணாக்கனை நோக்கி, பாசத்திலே விரிந்த போதத்தை விட்டுத் தன்னைத் தனக்கு அறுதியாகப் பெறுகின்ற தொழிந்து, இவனுக்கு அழிவில்லை யென்றும், பாசத்தை நீங்கினபொழுதே இவனும் வியாத்தனென்னு முறைமையும் அருளிச் செய்கின்றார் :

தன்னைப் பெறுவதின்மேற் பேறில்லை தானென்றும்
தன்னைத்தான் பெற்றவன் தானாரென்னில்—தன்னாலே
எல்லாந்த னுட்கொண்டு கொண்டதனைக் கொள்ளாதே
எல்லாமாய் நிற்கு மிவன்.

**(உரை)** தன்னைப் பெறுவதின்மேல் பேறு இல்லை - ஒருவன் பெறத்தக்க பேறுகளிலே தான் அழிந்துபோகாமல், அருளாலே தன்னை உறுதியாகப் பெறுகின்ற பேற்றின்மேல் வேறு பேறு இல்லை,—தானென்றும் தன்னைத்தான் பெற்றவன்றான் ஆர் என்னில்—தானென்றும் தன்னைத்தான் பெற்றவனென்றும் இரண்டாக இவ்விடத்திற் சொன்னது யாரையென்னில்?—தன்னாலே எல்லாம் தன் உட்கொண்டு கொண்டதனைக் கொள்ளாதே எல்லாமாய் நிற்கும் இவன் - ஆன்மா தன்னை அறியாமல் முன்பு பாசமேயாய் நின்ற முறைமை யொழிய, அருளாலே பரத்தையும் அறிந்து, பாசத்தையும் அறிந்து, இந்தப் பாசத்தை நீங்கின தன்னையுங் கண்டே, அண்டாண்ட பகிரண்டங்களையும் உணர்ந்து, தான் அறியாமற் கொண்டு நின்ற பாசத்தை ஒழிந்ததுபோல, இதையும் ஒழியவிட்டுத் தன்னுடைய போதஞ் சலியாமற் பூரணனாய் நிற்கவே, எல்லா வடிவுகளும் தன்னுடைய வடிவாய்த் தானே இந்த அண்டாண்ட பகிரண்டங்கட் கெல்லாங் கர்த்தாவாய் நிற்பன் இவன்றான். ௪௫

இந்த ஆன்ம யோகந்தானே பொருளாகில், ஞானயோகஞ் சிவயோக மென்று சொல்லவேண்டுமோ வென்ற மாணாக்கனை நோக்கி, இந்த ஆன்ம யோகந்தானே ஞான யோகமாம்படி அருளிச் செய்து, இந்த ஞானயோகந்தானே சிவயோகமாம்படியும் அருளிச்செய்கின்றார் :



துன்பமாம் எல்லாம் பரவசனாய்த் தான்துவளில்
இன்பமாம் தன்வசனாய்த் தானிருக்கில்—என்பதனால்
நின்வசனா யேயிருக்கில் நின்னுடனும் நேரிழையாள்
தன்வசனா யேயிருப்பன் தான்.

**(உரை)** தான் பரவசனாய் எல்லாம் துவளில் துன்பமாம் - ஆன்மா, தானே கர்த்தனாய் எல்லாவற்றையும் அறிகின்றவனாய் நின்று விகற்பிக்கில், இம்மை மறுமை இரண்டுக்கும் பிரயோசனமாகவுள்ளது கிலேசமொழிய வேறில்லை,—தன்வசனாய்த்தானிருக்கில் இன்பமாம்- ஆன்மா, திரிவு காட்சியான பிரபஞ்ச நீதியை விட்டு நீங்கித் தனக்கு உண்மையான சைதன்னிய சொரூபமாய் இதிலே நிருவிகாரமா யிருக்கில், இந்த ஆன்மயோகந்தானே ஞானயோகமாய் இந்த வழியிலே சுகரூபம் வந்து பிரகாசியா நிற்கும்,—என்பதனால் - என்பது வேதாகமங்களுக்கும் கருத்தாகையால்,— நின்வசனாயே இருக்கில், நேரிழையாள் தன்வசனாயே இருப்பன்றான் நின்னுடனும் - மாணவகனே! இந்திரிய வசனாகாமல் நீ உன்னையொழிந்த பொருள்களெல்லாவற்றையும் உனக்கு வேறென்று அறிந்துவிட்டு நீங்கி, நிருவிகாரமான ஞானமேயா யிருக்கில், அப்பொழுதே அந்த ஞானசத்தியின் வசமா யிருக்கின்ற ஞேய சொரூபனான சிவன் உன்னைக்கூடி வேறற நிற்பன். ௪௬

இந்தச் சிவயோகத்திலே இடைவிடாமல் அநுபவித்தலாவது இந்தக் கருவிகாரணங்கள் ஒருகாலமும் கூடாதபடி அருளிலே நிற்க வல்லவர்களுக்கே யென்று தோன்ற அருளிச்செய்கின்றார் :

செத்தாரே கெட்டார் கரணங்கள் சேர்ந்ததனோ(டு)
ஒத்தாரே யோகபர ரானவர்கள்—எத்தாலும்
ஆராத அக்கரணத் தார்ப்புண்டிங் கல்லாதார்
பேராமற் செல்வர்அதன் பின்.

**(உரை)** கரணங்கள் செத்தாரே கெட்டார் - அந்தக்கரணங்கள் நேராக அங்குரியாதபடி ஞானத்திலே கூடி மரித்த ஆன்மாக்களே, ஜநநமரணங்கள் கெட்டவர்கள்;—சேர்ந்து அதனோடு ஒத்தாரே யோகபரரானவர்கள் - இந்த ஞானத்தின் அழுத்தத்தினாலே பிரகாசித்த சிவரூபத்திலே பொருந்தி அதுவாய் நின்றவர்களே, சிவயோகத்திலே தற்பரமானவர்கள்,—இங்கு அல்லாதார் எத்தாலும்

ஆராத அக்கரணத்து ஆர்ப்புண்டு அதன்பின் போமல் செல்வர் - இப்படிச் சிவயோகத்திற் பொருந்தப்பெறாத பாக்கிய ஹீனர், எத்தாலும் திருப்தியடையப்பெறாத கருவி கரணங்களாலே கட்டுண்டு, இவற்றின் பின்னே தப்பாமல் ஏவற்செய்து, ஜநந மரணங்களிலே சென்று உழலா நிற்பர். ௪௭

இந்தக் கருவிகரணங்கள் ஒருகாலமும் பொருந்தாதபடி நிற்கின்ற சிவயோகிகள் பெருமை இருக்கும்படி அருளிச்செய்கின்றார் :

கண்ணும் கருத்தும் கடந்ததொரு பேறையும்
கண்ணும் கருத்தும் களிகூர—நண்ணி
வடம்அடக்கி நிற்கும் வடவித்தே போல
உடனடக்கி நிற்பர்கள்காண் உற்று.

(உரை) கண்ணும்...நண்ணி-யாவர்க்கும் கண்ணுக்கும் கருத்துக்கும் அளவுபடாததொரு பேறாயினும், சிவஞானிகள் சிவனுடனே இரண்டறக் கூடிப் பரமானந்தமே சொரூபமா யிருக்கையாலும், அவர்கள் கண்ணில் விசுவமில்லை யாகையாலும், ஒடுங்கினும் விழிப்பினும் பொருளேயாய், அவர்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் களிகூரப் பொருந்தி,—வடம்...உற்று-அநேகதூரம் படர்ந்ததோர் ஆலின் பரிணமமெல்லாம் ஒரு கடுகையொத்த வித்திலே அடங்கின தன்மை போல், அளவிடப்படாத வஸ்துவாயினும், தங்களுள்ளே அடக்கித் தங்களான்ம சுபாவத்தை விட்டு இந்தச் சிவமாகியே நில்லா நிற்பர்கள்.

அளவிடப்படாத பொருளை ஒருடம்பிலே நிற்பா னொருவன் அடக்கிக்கொண் டிருந்தபடி எப்படியென்ற மாணாக்கனை நோக்கி அருளிச்செய்கின்றார் :

வானகமும் மண்ணகமு மாய்நிறைந்த வான்பொருளை
ஊனகத்தே உன்னுமதென் என்றனையேல்—ஏனகத்து
வாதனையை மாற்றும் வகையதுவே மண்முதலாம்
ஆதனமே அன்றோ அதற்கு.

(உரை) வானகமும் மண்ணகமும் ஆய்நிறைந்த வான்பொருளை ஊனகத்தே உன்னுமது என் என்றனையேல் - ஆகாசமுதல் பிருதிவியீறாகவுள்ள பஞ்சபூத பரிணமமான பிண்டப் பிரமாண்டங்களும் இவற்றிற்குக் காரணமான தத்துவங்களும், இவற்றிற்குட்பட்ட ஆன்மகோடிகளும், தானேயாய்ப் பூரணமாய் நிற்கின்ற சொரூபத்தை ஒரு சரீரியானவன் தனக்குள்ளே அடக்க நினைத்தபடி எப்படியென்னில், —மண்முதலாம் அதற்கு ஆதனமே அன்றோ ஏனகத்து வாதனையை மாற்றும் வகை அதுவே,—மாணவகனே! பிருதிவி முதலாக முன் சொல்லப்பட்டவை யெல்லாம் அந்தப் பொருளுக்கு ஆதனமாத்திரமன்றோ ஆகையாலும் அப்பொருளை ஆசாரியனாலே கூடப்பெற்றவர்களிடத்தில் அந்தப் பொருளின் வியாத்தமெல்லா நின்று பிரகாசிக்கையாலும், ஞானதிருஷ்டி இல்லாதவர்களுக்குச் சரீரிகள் போலத் தோற்றினும் அவன் அந்த உண்மையேயாய் நிற்பவனாகையாலும், என்போல்வாரிடத்தும் அநாதியே கூடிப்போந்த வாசனையைப் போக்குகைக்கு இந்த நிலையேகாண் முறைமையாகவுள்ளது.



இந்தப் பொருளை உள்ளே கண்டு வாசனை தீர்ந்திருப்பார்போல் புறம்புங்கண்டு வாசனை போக்கலாமோவென்ற மாணாக்கனை நோக்கி அருளிச்செய்கின்றார் :

கல்லில் கமரில் கதிர்வாளில் சாணையினில்
வல்லுப் பலகையினில் வாதனையைச்—சொல்லும்
அகமார்க்கத் தாலவர்கள் மாற்றினர்காண் ஐயா
சகமார்க்கத் தாலன்றே தான்.

(உரை) கல்லினும், கமரினும், ஒளியையுடைய வாளினும், சாணைக் கல்லினும், சூதாடு கருவிப் பலகையினும், திருக்குறிப்புத்தொண்டர், அரிவாட்டாயர், ஏயர்கோன் கலிக்காமர், மூர்த்தியார், மூர்க்கர் என்னும் நாயன்மார் ஒவ்வொரு தொழில்களைச் செய்யும்போதே சொல்லப்பெற்ற சிவனளவில் ஒருவழிப்பட்ட கருத்தினாலே யன்றோ புறம்பேயும் அவன் பிரகாசிப்பிக்கப் பிறப்புக்கு வித்தான வாசனையைப் போக்கினார்கள் ; ஐயனே! இந்த முறைமை பொய்யான உலக நெறியாலன்றே. ௫௰

இந்த இரண்டு வகையில் எதிலே நின்று வாசனையைப் போக்கலாமென்ற மாணாக்கனை நோக்கி, இதனை இரண்டு வகையாக நீ கருத வேண்டாமென்றும், ஒரு படித்தாகக் காண வேண்டுமென்றும் அருளிச் செய்கின்றார் :

உள்ளும் புறம்பும் நினைப்பொழியில் உன்னிடையே
வள்ளல் எழுந்தருளும் மாதினொடும்—தெள்ளி

அறிந்தொழிவா யன்றியே அன்புடையை யாயில்
செறிந்தொழிவாய் ஏதேனுஞ் செய்.

**(உரை)** உள்ளும்...மாதினொடும் - உள்ளே காண வேண்டுமென்றும் புறம்பேகாண வேண்டுமென்றும் நீ விசாரித்த விடத்து, உன்னுடைய போதத்தையுஞ் சரீரத்தையும், முன்போலே கைவிடாமை கொண்டு, இரண்டு பட்டுத் தோன்றின தொழிந்து, அந்தப் பொருளுக்குத் தனித்தனி ஓரிடமிராதாகையால், பிண்டப் பிரமாண்டங்களையுந் தத்துவங்களையும் ஆன்ம போதத்தையும் உருவ தரிசன சுத்திகளாலே, அருளாக்கி ஒரு நீர்மையான ஞானமேயாய் உன்னினைவு ஒழிய நிற்கில், அப்பொழுதே உன்னிடத்திலே பரமசிவன் தன்னுடைய காருண்ணிய சத்தியுடனே கைம்மாறு கருதாமல் வந்து தோன்றி, உன்னை ஒரு தன்மை யாக்கிக்கொண்டு தானே பிரகாசியா நிற்பன்.—தெள்ளி அறிந்து ஒழிவாய் - இதனைச் சிவயோகத்தின் கண்ணே நின்று ஆராய்ந்து அநுபவிக்கின்றோ மென்கின்ற தன்மையுங் கைவிட்டு நிற்பாய்,—அன்றியே அன்புடையையாயின் செறிந்து ஒழிவாய் - இந்த முறைமையன்றி, சிவனுடைய உண்மையைக் கேட்குதல் நினைக்குதல் காண்குதல் செய்தபொழுதே, உன்னுடைய கருத்தை உருக்குவதானதொரு பேரன்பு கூடுமாயின், அதனாலே உன்னுடைய கருத்தானது நேராக அழிந்து சிவனுடனே ஒரு நீர்மையாய் விடுவாய்,—ஏதேனும் செய் - இந்த ஞானயோக பத்தி யோகங்கள் இரண்டினுள்ளே கூடின தொன்றைச் செய்வாயாக. ௫௧

இனி இந்தப் பத்தியோகந்தான் எப்படி யென்ற மாணாக்கனை நோக்கிப் பத்தியிலே நின்று பெற்றவர்கள் பெருமை இப்படி என்று அருளிச் செய்கின்றார் :

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை யென்றமையாற்
கண்ணப்ப னொப்பதோ ரன்பதனைக்—கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறிதல் அல்லதுமற்
றாறியும் அன்பன் றது.

**(உரை)** "கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை" என்று மாணிக்கவாசக மூர்த்திகள் அருளிச் செய்தபடியால், அவ்வன்பினைக்



கண்ணப்பநாயனாரும் காளத்தியப்பரும் அறிவாரன்றி மற்ற யாரும் அதனை அறியார். ௫௨

அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை
அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க—அவிழ்ந்தசடை
வேந்தனார்க் கின்னமுத மாயிற்றே மெய்யன்பில்
சேந்தனார் செய்த செயல்.

**(உரை)** மெய்யன்பினையுடைய சேந்தநாயனார் அன்பால் விரிந்த மனத்தோடு விரிந்த வஸ்திரத்தினின்று பக்குவமாய் மலர்ந்த அன்னத்தை அவிழ்த்து நிவேதிக்க (அது) விரிந்த சடையையுடைய சிவபிரான் உண்டருளுதற்கு இனிய அமிர்தமாயிற்று. அந்நாயனார் செய்த செய்கை எத்துணைச் சிறப்புடையதென்று கூறலாம். ௫௩

சுரந்த திருமுலைக்கே துய்யசிவ ஞானம்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்—சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையாள் அன்பிருந்த வாறு.

**(உரை)** பால் பொழிதற்கிடமாகிய உமாதேவியார் தனத்தினின்று தூய சிவஞானப் பாலைப் பொழிய (அதனைத்) திருஞானசம்பந்தப் பிள்ளையார் பருகியருளினாரென்று சொல்லக் கேட்டவளவிலே மங்கையர்க்கரசியார் பால் பொழிகின்ற தனமுடையராயினார். (ஆதலால்,) உருகும் உள்ளமுடைய அப்பாண்டிமாதேவியாரது அன்பிருந்த முறை (அளவிடற்பாற்றன்று). ௫௪

அன்பேயென் அன்பேயென் றன்பா லழுதரற்றி
அன்பேஅன் பாக அறிவழியும்—அன்பன்றித்
தீர்த்தந்தி யானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றே தான்.

**(உரை)** இப்படிப் பட்ட பக்தியோகத்திலே விட்ட குறைகளாலே சிவனுடைய உண்மையை நினைத்தல் கேட்டல் காண்டல் செய்த பொழுதே கரையழிந்த அன்பினாலே, ஒரு பலனையும் கருதாமல் அவ்வன்பு தங்கட்குச் சுரூபமாய் நின்று தங்களை மறந்து பேறு பெற்ற கண்ணப்ப நாயனார் முதலாயுள்ள நாயன்மாரன்பை

யொழிந்து தீர்த்தங்களும் தியானங்களும் அர்ச்சனைகளும் இப்படி அவதி கொடாமல் பேறு கூட்ட மாட்டாதாகையால் அவையும் இந்த உத்தமமான பத்தி கூட்டுதற்கு வித்தாம் இதனைச் செய். ௫௫

இனி யாவர்க்கும் பத்தி கூடுதற்கு அரிதென்றும், முறைமையிலே கூடத்தக்க ஞான யோகமே வாசனையைத் தீர்த்து முத்தியைத் தருவதென்றும், முன்னே பல பிரகாரங்களாகச் சொல்லப்பட்ட உபாயங்களின் தாற்பரியம் இதுவே யென்றும், மற்றுள்ள சமயிகள் தாற்பரியங்கள் இந்த உண்மையைக் கூட்டமாட்டாதென்றும், எல்லாவற்றையுந் தொகுத்து வாசனை தீர்ந்திருக்கைக்கு ஞான யோகமே பொருளென்றும் துணிந்து அருளிச்செய்கின்றார் :

எல்லார் அறிவுகளின் தாற்பரிய மென்னறிவு
செல்லு மிடத்தளவும் சென்றறிந்தேன்—வல்லபடி
வாதனையை மாற்றும் வகையிதுவே மற்றவற்றுள்
ஏதமறக் கண்ட விதம்.

**(உரை)** மாணவகனே! இந்த நூலிற் சொல்லப்பட்ட உபாயம் ஒழிந்து வேறும் அறியவேண்டுவது உண்டோவென்று நீ சந்தேசிக்க வேண்டுவதில்லை. எல்லாச் சமயங்களினும் எல்லாச் சாத்திரங்களினும் உண்டான தாற்பரியார்த்தங்கள் என்றால் ஆராயத்தக்கவளவும் ஆராய்ந்தறிந்தேன். அவை எல்லாவற்றினும் வாசனையைப் போக்கி முத்தியைக் கூட்டுகைக்கு முறைமையாகக் கண்டது, சைவ சித்தாந்தத்திற் சொல்லப்பட்ட இந்த ஞான யோகம் ஒன்றுமேயாதலால், இந்த அநுபூதி எல்லாக் குற்றங்களும் அறுகைக்குக் கண்ட அர்த்தமாதலின், நீயும் இந்த முறைமையிலே சாதிப்பாயாக. ௫௬

இனி இந்த அர்த்தத்தைப் பெறுதற்கரிய முறைமையும், பெற்றால் நிற்கவரிதான முறைமையும் அருளிச் செய்கின்றார்.

வித்தும்அதன் அங்குரமும் போன்றிருக்கும் மெய்ஞ்ஞானம்
வித்தும்அத னங்குரமும் மெய்யுணரில்—வித்ததனிற்
காணாமை யால்அதனைக் கைவிடுவர் கண்டவர்கள்
பேணாமை யால்அற்றார் பேறு.

**(உரை)** வித்தும் அதன் அங்குரமும் போன்று மெய்ஞ்ஞானம் இருக்கும் - நெல்லு முதலான புல வித்துக்களும் அங்குரிக்கும் பொழுது அங்குரத்துடன் [illegible] அந்த அங்குர

187094

## சமாஜச் சார்பில் புராணப் பிரசங்கங்கள்

சைவத் திருவாளர் - நாகி செட்டியாரவர்கள் மாளிகையில் (134, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர்) சனிக்கிழமை தோறும் இவை நடைபெற்று வருகின்றன. மார்கழி 10, 17, 24, 31-ம் தேதிகளில் முறையே திருவாளர்கள் - கி. குப்புச்சாமி முதலியார், தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, திரு. வி. உலகநாத முதலியார், ஆண்டியப்ப உடையார் ஆகிய பேரறிஞர்கள் முத்தாயியம்மைகதி, மூர்த்தி நாயனார் புராணம், நாரைக்கு முத்தியளித்த படலம், இரசவாதம் செய்த படலம் என்பன பற்றிய பிரசங்கங்களை நிகழ்த்தினார்கள். நூற்றுக் கணக்கான அன்பர்கள் வந்து கேட்டின்புற்றார்கள். அடுத்து நடைபெறும் பிரசங்கங்களின் விவரம் அடுத்த இதழில் வெளிவரும்.

## திருமயிலைத் திருவிழாவில் சமய போதனை

ஐந்தாம் திருவிழாவன்று மாலையில், திருவிழாவுக்கெனத் தருவிக்கப்பட்ட ஓதுவார் மூர்த்திகளால் தேவாரபாராயணம் சமாஜச் சார்பில் நடந்தது. ஒன்பதாம் திருவிழாவன்று திரு. கி. குப்புச்சாமி முதலியார் பிக்ஷாடனர் வரலாற்றையும், திரு. சுப்பிரமணிய நாயனார் சைவ சமயத்தின் தற்கால நிலையையும் பற்றிப் பேசினார்கள். பத்தாம் திருவிழாவன்று திரு. கி. குப்புச்சாமி முதலியார் திருக்கல்யாணத் தத்துவத்தை விளக்கினார்கள்.

## திருக்கச்சியேகம்பத்தில் சமய போதனை

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் திருவிழாவில் தினந்தோறும் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் தலைமையில் பல சொற்பொழிவுகள் நடைபெற்றன. திருவாளர்கள் - ச. சச்சிதாநந்தம் பிள்ளை, திரு. வி. உலகநாத முதலியார், பூ. சமரபுரி முதலியார், ம. பாலசுப்பிரமணிய முதலியார் முதலிய சமாஜத் தொண்டர்கள் சொற்பொழி வாற்றினார்கள். சுவாமிகள் பல தொண்டர்சள் புடைசூழ் சமாஜத்தினரோடு திருக்கச்சி அநேகதங்காவதம், திருக்கச்சி மேற்றளி, கைலாசநாதர் கோயில் ஆகிய தலங்களைத் தரிசித்துத் தலயாத்திரை முறையைச் சமாஜத்தினருக்குத் தொடங்கிக் கொடுத்து உபகரித்தார்கள்.

## வாலாஜாநகர் திருவிழாவில் சமய போதனை

இதற்கென்றே திரு. மல்லப்ப செட்டியாரவர்கள் தருமமாக வைத்திருக்கும் சொத்தின் வரும்படியைக் கொண்டும் அவர் நன்கொடையைக் கொண்டும் இது இவ்வாண்டிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. சமாஜத் தொண்டர் பலர் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். இவ்வரிய முறையை ஏனைய தலங்களும் பின்பற்றுக.

## மதிப்புரை

**சோம சம்பு பத்ததி** :—தமிழ் மொழி பெயர்ப்பு - பக்கம் 347 - விலை ரூ. 2½. கிடைக்குமிடம் - சிவாகமசங்கம் - தேவ கோட்டை - சிவாகமங்களிலுள்ள கிரியா காண்டப் பொருள்களைத் திரட்டி வரிசைப் படுத்திய பத்ததிகள் பதினெட்டுள் மிகச் சிறந்ததும், காலத்தால் முற்பட்டதும் (கி. பி. 8-ம் நூற்றாண்டு), சிவஞான சுவாமிகளால் தமது உரைகளிற் பல விடங்களில் மேற்கோளாகக் கையாளப் பட்டதும், சோம சம்பு சிவாசாரியார் இயற்றியதுமாகிய இந்நூலின் தமிழ் மொழி பெயர்ப்பை வரவேற்கின்றோம். இந்நூலில் நித்திய விதி, நைமித்திக விதி, காமியவிதி என்ற பெருந் தலைப்புக்களின் கீழ் சைவ நன்மக்கட்குரிய கிரியைகள் அனைத்தும் விவரிக்கப் பட்டுள்ளன. சிவபூஜை, அக்கினி காரியம், தீக்கை, பிரதிஷ்டை முதலியன பல பிரிவுகளின் கீழ் அவ்வவைகட்குரிய மந்திரங்களோடு தெளிவாக விளக்கப் பட்டுள்ளன. இந்நூல் பயில்வதால் கிரியையின் நுட்பங்களும் கிரியை ஞானத்தைப் பயக்கும் முறையும் இனிது விளங்கும். ஒவ்வொரு சைவரும் இந்நூலை வாங்கி சிவாகம சங்கத்தை ஆதரிக்க முற்பட வேண்டும்.

---

## சங்கப் புலவர் அகராதி

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு எனப் படும் சங்க நூல்களிற் காணப்படும் ஆசிரியர்கள் பெயர்களெல்லாம் அகர வரிசையில் தொகுக்கப்பட்ட இந்நூல், ஒவ்வொரு புலவரும் இயற்றிய பாடல்களும் இன்ன இன்ன என்ற குறிப்போடு பல பேரறிஞர்கள் உதவியைக் கொண்டு சமாஜப் பதிப்பாக வெளிவந்துள்ளது. தனிப்பிரதி விலை அணா 2½. தபாற்கூலி அணா 1. எட்டுப் பிரதிகள் விலை ரூபா ஒன்று. தபாற் கூலி வேறு ஒவ்வொரு தமிழ் மாணவரிடமும் இவ்வகராதி இருத்தற் குரியது.

---

## சிவஞான சித்தியார் சுபக்கம்

மூலமும் சிவஞான சுவாமிகள் உரையும் - சமாஜத்தின் அடக்க விலைச் சுத்தப் பதிப்பு - தனிப் பிரதி விலை அணா 12. ரிஜிஸ்தர் தபாற் கூலி அணா 5. எட்டுப் பிரதிகள் விலை ரூபா. 5. தபாற் கூலி வேறு.

---

**Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.**